# இறையியல் கோலங்கள்

வடிவம் 26 ஆடி – மார்கழி 2011 வண்ணம் 3,4

மறைபோதகப் பணியில் இளையோரின் பங்கு

இளைய தலைமுறையினரே நன்னெறி...

விவிலியத்தில் இளையோர்

கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் இளைஞர்கள்...

'பாலியற் கல்வி பற்றி சமுதாய...

வழி சொல்லிகளும் வகை மாதிரிகளும்

உலக இளைஞர் தின செய்தி...

இதழின் இறையியலாளர்

தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி வெளியீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

## தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL


Vol : 26
No. : 3,4
July - December : 2011

வடிவம் : 26
வண்ணம் : 3,4
ஆடி - மார்கழி : 2011


புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்: அருட்தந்தை மை.ஆ.போ.ற.சவுந்தரநாயகம்
துணை ஆசிரியர்கள்: அருட்தந்தை அ.யோ.ஜெயசீலன்
அருட்தந்தை ரி. ரவிராஜ்

நிர்வாகக்குழு: அருட்சகோ. ஆ. ஸ்கரன்ராஜ்
அருட்சகோ. இ. அன்ரனி சோசை
அருட்சகோ. ம.சதாஸ்கர்
அருட்சகோ.பி.ஜோண் றெக்ஷன்
அருட்சகோ. ஒ. றி. ரெறன்ஸ்
அருட்சகோ. அ. துஷ்யந்தன்

வெளியீடு: தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Editor: Rev.Fr.M.A.P.R. Savundranayagam

Sub Editors: Rev. Fr. A.J. Jeyaseelan
Rev. Fr. T.Raviraj

Administrative Board: Rev. Bro. A. Skaranraj
Rev. Bro. I. Antony Sosai
Rev. Bro.M.Sathaskar
Rev. Bro.P.John Rexon
Rev. Bro.R.O.Terance
Rev. Bro.A.Thushyanthan

Publication: St. Francis Xavier's Seminary,
Columbuthurai, Jaffna, Sri Lanka.
Tel. No.: 021 222 2482, 021 222 7145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


◈ ஆசிரியர் உரை
◈ மறைபோதகப் பணியில் இளையோரின் பங்கு
அருட்சகோதரன் ச.வசந்தன்
◈ இளைய தலைமுறையினரே நன்னெறி... 
சே. யோசப்பாலா 01
◈ விவிலியத்தில் இளையோர் 07
அருட்பணி P.தயாபரன்
◈ கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் இளைஞர்கள்...
அருட்பணி. A. A.நவரெட்ணம் 13
◈ 'பாலியற் கல்வி பற்றி சமுதாய, அரசியல், திருச்சபையின் நிலைப்பாடு"
அருட்திரு நோயல் இம்மானுவேல் 19
◈ வழி சொல்லிகளும் வகை மாதிரிகளும் 28
அருட்பணி. M.V.E.ரவிச்சந்திரன்
◈ உலக இளைஞர் தின செய்தி - 2011 மாட்ரீட், ஸ்பெயின்
அருட்பணி. நெவின்ஸ் யோகராச் 35
◈ தூய டொன் பொஸ்கோ 41
அருட்சகோ. துஷ்யந்தன
◈ SYNOPSIS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் உரை

"இளையோரின் சக்தி காட்டாறு போன்றது" என்ற உண்மை ஒரு புறம் இருக்க அத்தகைய பலம் பொருந்திய இளையோரை இன்றைய சமுதாயம் எவ்வாறு சந்திக்கின்றது என்று சிந்திக்க வைக்கும் முயற்சிக்கு ஒரு சிறு பங்களிப்பாக இந்த இதழின் ஆக்கங்கள் அமைந்துள்ளன.

இளையோரின் வாழ்வில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்து கின்ற பாலியல் கல்வி பற்றிய ஆக்கத்துடன் ஆரம்பித்து வேதநூல் எடுத்துக்காட்டும் இளையோர் சிலரின் வாழ்வும், மறைபோதக பணியிலும் சமூக முன்னேற்றத்திலும் இளையோரின் பங்கும், கிறிஸ்தவ கண்ணோட் டத்தில் இளையோரின் பிரச்சனைகளும் வெவ்வேறு ஆக்கங்களில் கருத்தில் கொள்ளப்படுகின்றன. மேலும் இளையோர் தின செய்தியும் சொல்லப் படுகின்றது.

இளையோரின் நல் வாழ்வில் நாம் எல்லோருமே அக்கறை கொள்ள வேண்டும் என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன். கைத்தொலைபேசி களின் வளர்ச்சி உச்சக்கட்டத்தை அடைந்து கொண்டு இருக்கின்ற நிலையில் "இளையோர்களை நெறிப்படுத்தவே முடியாது" என்று தம் பொறுப்பில் இருந்து விலகி நிற்பதை விட்டு விட்டு பெற்றோர்களும், அனுபவம் மிக்க அனைவரும் நம் இளைஞர், யுவதிகளுக்கு சொல்ல வேண்டிய விடயங்களை நல்ல முறையிலே சொல்லுவதற்கு உகந்த சந்தர்ப்பங்களை ஆர்வமுடன் தேடி அன்போடும், பண்போடும் இளையோருடன் ஈடுபட்டு அவர்களை தட்டிக் கொடுத்து வளர்த்து விட வழி செய்வோமாக.

Fr. M.A.P.R. Savundranayagam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைபோதகப் பணியில் இளையோரின் பங்கு

அருட்சகோதரன் ச. வசந்தன்

## முன்னுரை



இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்பது, பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் கருத்து! இளமை இனிமையானது, புதுமையானது, எந்த வேளையிலும் ஏதாவதொன்றைப் புதிதாக உருவாக்கத் துடித்துக் கொண்டிருக்கும் பருவம் அது. இந்த இளமைப்பருவம், திரும்பவும் பெற முடியாத ஒன்று என்பதை மனதில் ஏற்று, நமக்கு தரப்பட்ட சந்தர்ப்பத்தை தகுந்த முறையில் பயன் படுத்தி எதிர்கால சமூதாயத்தை நல்ல முறையில் கட்டி யெழுப்ப அத்திவாரம் இடும் ஊக்குவிப்பாளர்களே இன்றைய இளைஞர்கள்.


"இருந்தாலும் இறந்தாலும் பேர் சொல்ல வேண்டும். இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்." என்ற கவி வரிகளுக்கொப்ப தமது இளமைப்பருவத்தை பக்குவமாக பயன்படுத்தி, வரலாற்றில் தடம் பதித்து, முத்திரையிட்டுச் செல்ல வேண்டியவர்கள் இன்றைய இளைஞர்களே! அந்த வகையில் இளைஞர்கள் தாம் வாழுகின்ற சமூதாயத்தில், சூழலில், திருச்சபையில் எவ்வாறு தங்கள் இளமைப்பருவத்தை ஆக்கச் செயல்களில் ஈடுபடுத்த வேண்டும் என்பதையும் முக்கியமாக மறைபோதகப் பணியில் இளையோரின் பங்கு என்ன? எவ்வகையில் அமைய வேண்டும் என்பதை அலசிப்பார்ப்பதே இக் கட்டுரையின் உயர் நோக்கம்.

## இன்றைய பண்பாட்டுச் சீரழிவுகள்

இன்றைய தமிழ் பண்பாடு, பன்முகச் சீரழிவுகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. என்பது மறுக்க முடியாத உண்மை. "உலக மயமாக்கல்" இன்று உலகின் அனைத்து நுகர்வுப் பொருட்களையும் நம்முன் கொண்டு வந்து குவித்துக் கொண்டிருக்கிறது. புதிதாக வந்துள்ள பொருட்களையும் வாங்கி பயன்படுத்தாதவர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்ற உணர்வையும் ஏற்படுத்தி விடுகின்றனர். புதியவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனுபவிக்க இயலாதவர்களிடம் ஒரு வகை தாழ்வு மனப்பான்மையும் ஏற்படுகின்றது அடுத்து போதை பொருட்களுக்கு அடிமையாகும் இளைஞர் நிலை, பெண்களையும் ஒரு போதைப் பொருட்களாக எண்ணிப் பார்த்தல் இன்றைய இளைஞர் சமூதாயத்தில் ஒரு சாதாரண செயலாகவே இன்றைய திரைப் படங்களும் காட்சிக்கு வந்துள்ளன.

இவற்றில் இருந்து விடுபட்டு ஒரு நற்சமூகத்தை, இறைவனின் பார்வையில் கட்டியெழுப்ப திருச்சபைத் தாய் இன்று எல்லோருக்கும் அழைப்பு விடுக்கின்றாள். அந்த வகையில் இளையோருக்கு பாரிய பொறுப்பு இருக்கின்றது. இளைஞர்கள் தாம் வாழுகின்ற சமூகத்தில் உப்பாக ஒளியாக வாழ அழைக்கப்படுகின்றார்கள். இளைஞர்கள் நல்ல கத்தோலிக்க வாழ்க்கை வாழுகின்ற பொழுது அதுவே தலைசிறந்த மறைபோதகப் பணியாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

## இறைவன் தரும் அழைப்பு

இறைவார்த்தை இளம் உள்ளங்களுக்கு உந்துசக்தியாக அமைகின்றது என்பதை நாம் மறுக்க முடியாது. எனவே தான் "இளைஞர் தம் நடத்தையை மாசற்றதாய் காத்துக்கொள்வது எவ்வாறு? உம் வாக்கைக் கடைப்பிடிப்பதால் அன்றோ?" என்று திருப்பாடல் ஆசிரியர் (119:9) தெளிவுபடுத்துகின்றார். கடவுளின் கட்டளைகளைக் கருத்தில் கொண்டால், இளைஞர்கள் நீதிநெறியாலும், நேரிய வாழ்விலும் நிலைத்திருப்பர் என்பது கடவுளின் வெளிப்பாடு (தி.பா. 119:6-7) இளைஞரான திமொத்தேயுவுக்கு அறிவுரை கூறிய பவுல் அடியார் "தீயோர்களும் எத்தர்களும் மேலும் மேலும் கேடுறுவார்கள், ஏமாற்றும் இவர்கள் ஏமாந்து போவார்கள். நீ கற்று உறுதியாய் அறிந்தவற்றில் நிலைத்து நில் யாரிடம் கற்றாய் என்பது எனக்குத் தெரியுமே. நீ குழந்தைப் பருவமுதல் திருமறை நூலைக் கற்று அறிந்திருக்கிறாய்" (2 திமொ 3:13-15) அதாவது இளம்பருவமுதல் நாம் அறிந்து வரும் திருமறை நூல், நம்மைக் கடவுளின் ஞானத்தில் வளர்க்கிறது! எனவே நேரிய வாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டுகிறது என்று பவுல் சுட்டிக்காட்டுகின்றார்.

இளமைக்காலங்களில் கடவுளின் வாக்கை நாம் கடைபிடிக்கும் போது, அதுவே நமது இயல்பாக மாறிவிடுகிறது. இத்தகைய நிலைப்பாட்டில் நாம் வாழும் வாழ்வு, நமது பலவீனப்பட்ட இயல்புகளைக் கூட மாற்றக் கூடியது.

ஆகவே இளைஞர்கள் இறைவார்த்தையின் ஒளியில் தங்களுடைய வாழ்வை கட்டியெழுப்புகின்ற போது; அதுவே பெரிய மறைபோதகப் பணியாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநூலில் வரும் இளையோர்கள்

இளமைப் பருவத்தை அர்த்தமுள்ளதாக்கி, தம்மையும், தாம் சார்ந்த மக்களையும் மனுக்குலத்தையும் இறைவனடி கொண்டு சேர்க்க, அயராதுழைத்த பல இளைஞர்களைத் திருநூலிலே சந்திக்கின்றோம். இவர்கள் வாலிப வயதை, சமூதாய சீரழிவுகளிலே சிக்குண்டு அழிய விடாது, இறைவனின் விருப்பத்திற்கேற்ப ஒரு நற்சமூகத்தை உருவாக்கவும், ஒரு நாள் அழிந்து போகும் இவ்வுலக வாழ்வு, நித்தியமானதல்ல, நிரந்தர வான்வீடே நித்தியமும் நிலையானதும் என எடுத்துச் சொல்ல முன்வந்தவர்கள், இன்றைய இளைஞர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்கின்றனர். இவர்களுடைய தியாகங்களும், அர்ப்பணிப்பு உணர்வுகளும், எமது இளைஞர்களுக்கு தக்க பாடமாக அமைகின்றன. இறைவன் தன் மக்களை விடுவிக்க இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் மூலமாக அரும்பெரும் செயல்கள் ஆற்றியதை திருநூல் எடுத்துக் கூறுகின்றது.

அந்த வகையில் "சிம்சோன்" (நீ.த 13-16 அதிகாரங்கள்)
புரட்சிப் பெண் யூதித்து (யூதி 13-16 அதிகாரங்கள்)

எடுத்துக்காட்டான இளைஞர்களாக திகழ்கின்றார்கள். மேலும் திருநூலைப்படிக்கின்ற போது நாம் முன்னுதாரணமாக கொள்ளக் கூடிய பல இளைஞர்களைக் காணலாம். இளைஞர்கள் தங்கள் போதகப் பணியை வார்த்தையால் மட்டுமல்ல, வாழ்வாலும் சாதித்துக் காட்ட வேண்டும் என்பதற்கு இவர்கள் ஒரு முன்னுதாரணம்.

## இளைஞர்களுக்கு சிறந்த மாதிரி இயேசு


இயேசு உண்மையில் மனிதனாகப் பிறந்தவர் என்ற உண்மையை ஏற்றுக்கொண்டால், இன்று உள்ள இளைஞர்கள் போன்றே இயேசுவும், சமூதாய, சமய, அரசியல் சார்ந்த சவால்களை எதிர் கொண்டார் என்றே கூறவேண்டும். அவர் மனிதர் என்ற முறையில் வாழ்ந்தாலும் பாவம் செய்யாத இளைஞராக வாழ்ந்து இருக்கிறார். (எபி. 4:15) எனவே இன்றைய சூழலில் பல்வேறு தனிப்பட்ட, சமயம், சமூதாயம், மற்றும் அரசியல் சார்ந்த பல்முனைத் தாக்குதல்களுக்கு உள்ளாகி வழிதெரியாது வாழ்ந்து கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு, இயேசு சிறந்த வழிகாட்டி என்பதை மறுக்க முடியாது.

ஒவ்வொரு இளைஞரும் தன் முப்பது வயதுக்குள் வாழ்க்கையின் இலட்சியத் தெளிவைப் புரிந்து செயற்படுத்தக் கற்றுக்கொண்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யவில்லையென்றால், எதிர்காலம் என்பது, சுக்கானில்லாத கப்பலாக, வாழ்க்கைக் கடலில் தத்தளிக்க நேரிடும். இயேசு தனது முப்பதாவது வயதில் "இறையாட்சி என்ற இலட்சியக் கனவுடன் பணிசெய்யப் புறப்பட்டார்." அவர் ஒரு நாடோடிப் போதகராகப் புரட்சி செய்தார். பலரும் அவர் பின்னால் வரமுயன்றனர். எனினும் அவர் தன்னுடைய எளிய வாழ்க்கையை எடுத்தியம்பி இதில் சவால்கள் அதிகம் என்று காட்டினார். எளிய வாழ்க்கை வாழ்ந்ததால் தான் சிறுவர் கள் கூட அவரிடம் வரமுடிந்தது (லூக் 18:15-17) இயேசுவின் ஒப்புயர்வற்ற இளைமைத்துவம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மக்களை வழிநடத்திட கண்டுபிடித்த வழி முறையே ஆகும். அவரது எளிய போதனை முறை காலத்தையும் வென்று தலைநிமிர்ந்து நிற்கின்றது.



எனவே ஒவ்வொரு இளைஞனும் ஆண்டவர் இயேசுவை தன்னுடைய வாழ்க்கையின் முன்னுதாரணமாக, மையமாக கொண்டு வாழுகின்ற பொழுது அவனால் மறைபோதப் பணிக்கு சிறந்த பங்காற்ற முடியும், எவ்வகையில் என்றால் அவன் மறு கிறிஸ்துவாக உலகில் உலாவருகின்ற போது அவனுடைய ஒவ்வொரு செயற்பாடும் மறைபோதகமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## முடிவாக

இளைஞர்கள் தங்கள் வாழ்வுக்கு ஏற்ப எளிய வழிமுறைகளைப் பின்பற்றக் கற்றுக்கொள்ள வேண்டும். கற்றுக்கொள்வதில், இருந்து கற்பிப்பது வரை மிகவும் கடினம் என்றாலும் பலரும் பயன்பெறும் வழிமுறைகளைக் கண்டுகொள்ள வேண்டும் பல இளைஞர்கள் தங்களின் தொடர் போராட்டத்தால் விடாமுயற்சியால் பலரின் வாழ்க்கைக்கு வழிகாட்டும் புதிய கண்டுபிடிப்புக்களை கொண்டுவந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். இவர்கள் இயேசுவின் வழியை அறிந்து கொண்டவர்கள். இவர்களின் வரிசையில் பலரும் தொடர வேண்டும் என்பது தான் இயேசுவின் விருப்பம். இவ்வாறு இயேசுவின் விருப்பத்தை பல்வேறு நிலைகளில் அறிந்து அதற்கு ஏற்ப தமது வாழ்வை அமைத்துக் கொள்வதே மறைபரப்பில் இளைஞர்களின் பங்காக இருக்கின்றது.

## நடைமுறைக்கு

- இளைஞர்கள் பங்குத்திருச்சபையின் பணிகளை முன்நின்று செய்ய முன்வர வேண்டும்.
- இளைஞர்கள் குழுக்களாக இணைந்து சமூதாய முன்னேற்றத்தின் பணிகளைச் செய்ய பின் நிற்கக் கூடாது.
- பங்குத்திருச்சபையில் உள்ள சபைகளில் இணைந்து செயற்பட வேண்டும்.
- கத்தோலிக்க இளைஞர்கள் மக்களின் முன்னேற்றத்திற்காக அரசியலில் உண்மையுடனும் நேர்மையுடனும் செயற்பட முன் வரவேண்டும்.

மேற் கூறப்பட்ட செயற்பாடுகளில் இளைஞர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதும் அல்லது செயற்படுத்துவதும் இளைஞர்கள் மறைபோதகப் பணிக்கு ஆற்றுகின்ற பெரும் பங்காகவே அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய தலைமுறையினரே நன்னெறி சமூகத்தின் அடையாளங்கள்

சே. யோசப்பாலா

படைப்பின் சிறப்பில் மிக முக்கியமானது இறைவன் மனிதனை தனது சாயலாக படைத்தார் என்பதை உணரும் பக்குவம் தான் ஆன்மீக தேடலின் விடையாக மிளிரும். மனிதனின் வாழ்வு தனிமைப்பட்டதாக இல்லாமல் குடும்பம், சமூகமாக வளரும் நிலையில் சமூக மாற்றங்கள், தேடல்கள் நன்னெறி சமூகத்தை ஆன்மீக விழுமியங்களைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றன.

நன்னெறி சமூகம் மலர மனித சமூதாயத்தில் வழிகாட்டல்கள் பலவான போதும் அதனை உய்த்துணர்ந்து கடைப்பிடிப்பதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் போதனைகளாலும், மதங்களாலும், குடும்ப முன்மாதிரிகைகளாலும், முன்னெடுக்கப்பட்டாலும் கணிப்பிட்டு சிறந்த சமூகம் யார் என்பதனை நிர்ணயிப்பது சிறந்த குடும்ப சூழலுள்ள இளைய தலைமுறையினரது செயல்களே வெளிப்பாடாக மிளிரும்.

சமூக மாற்றத்தின் முன்மாதிரிகளான இளையோர் மட்டில் அதிக எதிர்பார்ப்புக்கள் இன்றைய காலத்திலும், உலகினாலும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஏன் என்றால் "இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்" என்ற முதுமொழி பொய்த்துப் போய் "இன்றைய இளைஞர்கள் இன்றைய தலைவர்கள்" என்பதனை உள்ளூர்களிலும், உலக அரங்கிலும் மாறிவரும் இளையோரின் செயல் வடிவங்களே காரணமாகும்.

இளையோரின் செயல்கள் திடீர் எனத் தோன்றி விடுவதில்லை. அவர்கள் வாழும் சூழல் வளர்ந்து வரமுன் நின்றவரின் முன்மாதிரிகள், வழிகாட்டிகள், குடும்ப சூழல், இன்றைய நவீன செய்தி தொடர்பூடக செல்வாக்குகளே இளையோரின் உருவாக்கத்தில் அதிக செல் வாக்கு செலுத்த வல்லன. அதனால் "வீண் பெருமைகளைத் தேடாமலும், ஒருவருக்கொருவர் எரிச்சல் ஊட்டாமலும், ஒருவர் மீது ஒருவர் பொறாமைப் பாடாமலும் இருப்போம்" என்ற கலாத்தியர் திருமுக வாக்கை வழிநடாத்த உழைப்போமா?

இளைய தலைமுறையினர் தம்மைத் தாமே மீட்டுப்பார்க்க எமது சமுதாய மாற்றத்தின் பங்காளராவதில் ஈடுபட கிடைத்த சந்தர்ப்பங்களை தேடுவோமெனில் "மதிப்புக்குரிய இனம் எது? மனித இனம், மதிப்புக்குரிய இனம் எது? ஆண்டவருக்கு அஞ்சுமினம்" என்றும் "இளமை முதல் நற்பயிற்சியை தேர்ந்து கொள், முதுமையிலும் ஞானம் பெறுவாய், உழுது விதைத்து பின் நல் விளைச்சலுக்காகக் காத்திருக்கும் உழவர் போன்று ஞானத்தை அணுகு" எனச் சீராக் ஆகமம் கூறுகிறது. இவை இளையோர் வாழ்விற்கு என்றும் பொருத்தமானதே.

சமூகத்தில் இளையோர் செல்வாக்கு அதிகரித்திருப்பதை முதலில் இளையோர் உணரும் நிலையை உருவாக்கும் சந்தர்ப்பங்களில் தன்நம்பிக்கையும், ஆளுமை விருத்தியும், ஆன்மீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியங்களும், சமூகப் பொறுப்பும் வளரும் சந்தர்ப்பங்களே நன்னெறி சமுதாய தலைவர்களாக சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தும் இளையோராய் மிளிர வாய்ப்புண்டு.

இளையோரே "நன்மை செய்வதில் மனம் தளராது இருப்போமாக. நாம் தளர்ச்சி அடையாதிருந்தால் தக்க காலத்தில் அறுவடை செய்வோம். ஆகையால் காலம் இன்னும் இருக்கும் போதே எல்லோருக்கும் சிறப்பாக, நம்பிக்கை கொண்டோரின் குடும்பத்தினருக்கும் நன்மை செய்ய முன்வருவோம்" என கலாத்தியர் திருமுகம் கூறும் வார்த்தையை வாழ்வாக்குவோம்.

இன்றைய இளையோர்களின் பொழுது போக்கு, சமூகப் பொறுப்பு, ஆன்மீக விழுமியங்கள் பற்றிய தெளிவு குடும்பத்திலும், பொது இடங்களிலும் கொடுக்கத் தவறியதும், சூழலை உருவாக்காமையும் இறையியல் அனுபவங்கள் அருகி வருதல் கலாசார, ஆன்மீக, பண்பாடு விழுமியங்கள் சிதைவடையக் காரணமாவதை பலராலும் சுட்டிக் காட்டப்படுவது ஒருபுறம், மிகைப்படுத்தப்பட்ட இளையோர் மீது குற்றச்சாட்டுக்கள், பிரச்சாரப்படுத்துவதில் ஊடகங்களின் பங்களிப்புக்களும் அதிகமாகி வருவதை அவதானிக்க முடிகிறது.

யார் இந்த இளையோர்? அவர்களின் பிறப்பில் பெயர் வைத்ததில் இருந்து ஆன்மீக நன்னெறி பழக்கவழக்கங்கள் வரை ஊட்ட வேண்டிய பருவம் விபரமறியாத சூழலில் குடும்பமும், போதனையூட்டும் சமயங்களும் தமது விதைப்பை மீள்பார்வை செய்ய வேண்டியதும் காலத்தின் தேவையாகவுள்ளது. அறிவு விருத்திக்கான காலப்பகுதியில் முதல்நன்மை, உறுதிபூசுதல், மறைக்கல்வி, திருமண முன் ஆயத்த முறைமைகள் பரீட் சைக்கு தயாராகும் முன்னாயத்தமாக மட்டும் உருவாக்கப்படுதல் மூலமும் ஆர்வக் குறைவாய் இருப்பதும் காரணமாகலாம்.

இருளைப் பழிப்பதை விட ஒளி ஏற்றும் வகையில் இளையோரின் திறமைகள், சிறப்புக்கள், ஆர்வங்களை ஊக்கமூட்டவும், அதனை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி ஆற்றல் திறன்களை நன்னெறிச் சமூகம் மலர பொறுப்புக்களை இளையோரிடம் அளிப்பதன் மூலம் அறுவடைகளை சமூகம் அனுபவிக்க வாய்ப்பாக்கலாம்.

இளமைகளின் குறும்புத்தனம், தவறுகள் கூட அதிகமாக தெரியலாம். அவர்கள் சமூகத்தை வழிநடாத்த வேண்டியவர்கள் என்பதனை உணர்ந்தவர்கள். குறைகளைக் கூறியே இளை யோரை குட்டிச்சுவராக்காது, குறைகள் உள்ளவர்களிடத்தில் உள்ள நிறைகளைப் பாராட்டி ஊக்கப்படுத்துவதால், நிறைகளை வளர்ப்பதுடன் குறைகளைத் தவிர்க்கவும், நன்நெறிச் சமூகத்தின் பங்காளராக இன்றைய இளையோரை பொறுப்புள்ளோராக உருவாக்கவும் வாய்ப்பு ஏற்படுத்தலாம்

எமது சூழலில் இளையோரை அணுகுவதில் சமநிலை உறவுகள், கலந்துரையாடல்கள், இளையோரின் இலக்குகள், அடையாளங்கள் நன்நெறிச் சமூகத்தின் வெளிப்பாடாக எமது இளையோரும் விழித்து எழும் பொறுப்பு, சமூக மாற்றத்தின் முக்கிய பங்காளர், பொறுப்பாளர் என உணரவும் உணர்த்தவும் எமது நாட்டு இளையோர் எமது சமூகத்தின் அடையாளங் களாவார்கள் என்பதை சொல்லால் அல்ல செயலால் காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியத்தில் இளையோர்


அருட்பணி P. தயாபரன்

## முன்னுரை

இளையோரின் நல் வாழ்வுக்கு வலுவூட்டும் நல்ல பாடங்களாக, முன்னுதாரணமாக வாழ்ந்தவர்களின் வாழ்க்கைப் பண்புகள் அமைகின்றன. அந்த வகையில் விவிலியத்தில் நாம் சந்திக்கின்ற பல மனிதர்களின் சாட்சிய வாழ்வு இன்றைய இளையோரின் வாழ்வுக்கு முன்னுதாரணமாக, சவாலாக, அழைப்பாக அமைகின்றன. நவீன வாழ்க்கைமுறை, நாகரீகம், அரசியல், சமூக, சமய கொள்கையியல் வசீகரச் செயல்களினால் இன்றைய இளையோர் தமது தனித்துவத்தை, தம் இனத்தின் மதத்தின் தனித்துவமான வாழ்வியல் விழுமியங்களை, அடையாளங்களை இழந்து, உண்மையை, நீதியை எடுத்துச் சொல்ல துணிவற்றவர்களாக, ஞானமற்றவர்களாக, விவேகமற்றவர்களாக பொய்மைக்கு அடிபணிந்தும், உடல், உள சோதனை களை வெற்றி கொள்ள முடியாதவர்களாக தீய பழக்கங்களுக்கு அடிமையாகி வாழும் நிலையைக் காண்கிறோம். இந்நிலையில் விவிலியத்தில் காணப்படும் பல மனிதர்களில் சிறப்பாக தமது வாலிபப் பருவத்தில் சிறப்புமிகு நற்பண்புகளை, நல் வாழ்க்கை முறைகளை வாழ்ந்த யோசேப்பு, தானியேல், யோவான், ஸ்தேவான் என்பவர்களின் முதன்மையான வாழ்க்கைப் பண்புகள் சிலவற்றை இனங்கண்டு பல சவால்கள் மத்தியில் வாழும் இளை யோரின் வாழ்விற்கு அவர்களின் சாட்சிய வாழ்வு விடுக்கும் அழைப்பை கண்டு கொள்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## யோசேப்பு

யோசேப்பு பதினேழு வயது இளை ஞனாய் இருந்த போது தன் சகோதரர் களோடு சேர்ந்து மந்தை மேய்த்தார். தன் சகோதரர்கள் தவறான வழியில் சென்ற போது அவர்களோடு சேர்ந்து தீமை செய்யவில்லை. தன் சகோதரர்கள் தீச் செயல்களில் இருந்து விடுபட அவற்றை தன் தந்தை யாக்கோபிடம் சொன்னார். இன்னும் யோசேப்பு தன் முதிர் வயதில் பிறந்ததால் யாக்கோபு இவரை அதிகமாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு செய்தார். இதனால் யோசேப்பின் சகோதரர்கள் இவரை வெறுத்தனர். அவரோடு பாசமாகப் பேசவில்லை. (தொ.நூ. 37:1-4) இருப்பினும் தொலைதூரம் மேய்ச்சலுக்குச் சென்ற தன் சகோதரர்களின் நலன் விசாரிக்க தன் தந்தை எண்ணிய போது தயக்கம் எதுவுமின்றி தன்னை வெறுக்கின்ற சகோதரர்களை சந்திக்க தேடிச்செல்கின்றார். (தொட.நூ. 37:13). ஆனால் அவர் மீது பொறாமை கொண்ட சகோதரர்கள் அவரை கொலை செய்ய முற்படுகின்றனர். ஈற்றில் இருபது வெள்ளிக்காசுக்கு அவரை விற்கின்றனர். ஆனால் எகிப்பதில் அடிமையாய் இருந்த யோசேப்பு இறைவனின் உடனிருப்பால் எகிப்திய அரசாட்சியில் உயர் பதவி வகித்தார். அக்காலத்தில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தினால் அவருடைய சகோதரர்கள் உணவு தேடி எகிப்திற்கு வந்தனர். அவர்கள் யார் என இனம் கண்ட யோசேப்பு அவர்கள் மீது கோபம் கொள்ளாது, அவர்களை வெறுக்காது, பழிவாங்காது, அவர்களை மன்னித்து ஏற்றுக்கொள்கிறார். (தொ.நூ. 42-56)

இருபது வெள்ளிக் காசுகளுக்கு யோசேப்பை வாங்கிய இஸ்ரயேலர்கள் பார்வோனின் படைத்தலைவனாகிய போத்திபாரிடம் அவரை அடிமையாக விற்றனர். ஆண்டவர் யோசேப்புடன் இருப்பதையும், அவர் வழியாக தான் சிறப்புறுவதையும் கண்ட போத்திபார் யோசேப்பை தன் சிறப்புப் பணியாளராகவும், வீட்டின் மேலாளராகவும் நியமித்தார். யோசேப்பின் நல்ல உடற்கட்டிலும், அழகிய தோற்றத்திலும் மயங்கிய போத்திபாரின் மனைவி தன் காம இச்சைக்கு அவரை உட்படுத்த பல தடவைகள் முயன்றார். ஆனால் யோசேப்பு இந்த மாபெரும் தீச்செயலைச் செய்து கடவுளுக்கு எதிராகவும், தன் தலைவனுக்கு எதிராகவும் பாவம் செய்யாது தீச் செயலுக்கு இணங்க மறுத்து, சோதனைகளை வென்று தன் கற்பை காத்தார். இதனால் போத்திபாரின் மனைவி வீண் பழிசுமத்தி யோசேப்பை சிறையில் அடைத்தார். (தொ.நூ. 39-1-19)

## தானியேல்

பாபிலோனிய மன்னன் நெபுகத்னேசரால் கைதியாக்கப்பட்டு பாபிலோனுக்கு கொண்டு செல்லப்பட்டு அரசசபையில் பணிபுரிய கல்விபெற்ற யூத இளைஞர்களில் தானியேலும் ஒருவர். அரசனது சிறப்புணவினாலும், திராட்சை இரசத்தினாலும் தம்மை தீட்டுப்படுத்திக் கொள்ளாது தனது மூதாதையரின் யூத ஒழுங்கு முறைகளையும், சமய முறைகளையும் பிரமாணிக்கமாக கடைப்பிடித்தவர். (தானி. 1:8) அரசன் ஒரு பொற்சிலை ஒன்றை உருவாக்கி அதன் முன் அனைவரும் தாழவீழ்ந்து பணிய வேண்டும். இல்லையேல் தீச் சூளையில் போடப்படுவர் என கட்டளை பிறப்பித்தான். ஆனால் தானியேலும் அவரது நண்பர்களும் தங்கள் கடவுளைத் தவிர வேறெந்த தெய்வத்தையும் பணிந்து தொழ மறுத்தனர். அரசனின் கட்டளையை பொருட்படுத்தவில்லை இதனால் தீச்சூளையில் போடப்பட்டனர். ஆனால் அவர்களது இறைநம்பிக்கை அவர்களை காப்பாற்றியது. (தானி. 3:16-26) மேலும் தானியேலின் நிர்வாகத்திறமை மீது பொறாமை கொண்டவர்களின் தூண்டுதலால் அரசனைத்தவிர வேறெந்த தெய்வத்திடமோ, மனிதரிடமோ யாதொரு விண்ணப்பம் செய்கின்ற எவனும் சிங்கக் குகையில் தள்ளப்படுவான் என்ற சட்டம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் தானியேல் தனது வழக்கப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்தோறும் மூன்று வேளையும் தன் கடவுளுக்கு முன்பாக முழந்தாளிலிருந்து மன்றாடினார். (தானி. 6:10) இதனால் சிங்கக் குகையில் போடப்பட்டார். இருப்பினும் இறைவன் அவரைக காப்பாற்றினார். அரச சலுகைக்காக, அதிகாரிகளின் அச்சுறுத்தலுக்கு பயப்படாது தானியேல் தனது இன, மத ஒழுங்கு முறைகளை, கடமைகளை கடைப்பிடித்தார்.

எல்லா ஞானத்திலும் தேர்ச்சி பெற்ற, அழகிலும், அறிவிலும், உணர்விலும் கல்வியிலும் சிறந்தவர்களை தேர்ந்து அரண்மனையில் பணியாற்ற பயிற்ச்சி பெற்றவர்களில் முதன்மையானவர் தானியேல். (தானி. 1:4) தானியேல் தன் ஞானத்தால் காட்சிகளையும், கனவுகளையும் உய்த்துணரும் ஆற்றல் பெற்றிருந்தார். சிறப்பான அறிவையும், அனைத்து இலக்கியத்திலும் தேர்ச்சியையும் கொண்டிருந்தார். இதனால்ஞானம், விவேகம் சார்ந்தவற்றில் அரசன் தானியேலுடன் கலந்துரையாடினான். ஒருமுறை பாபிலோனிய ஞானிகள் அரசனின் கனவுக்கு பொருள்கூற முடியாமையினை முன்னிட்டு அவர்களை அழிக்க முற்பட்ட வேளை தானியேல் தன் ஞானத்தினால் அவர்களை காப்பாற்றுகிறார். தானியேல் இறைநம்பிக்கை, தெய்வபயம் அவரை ஞானமுள்ளவராக மாற்றியது.

## யோவான்


யேசுவின் அழைப்பைப் பெற்று அனைத்தையும் யேசுவுக்காய் இழந்து யேசுவைப் பின் தொடர்ந்தவர் யோவான் (மாற்கு 1:19-20). யேசுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரண்டு திருத் தூதர்களில் ஒருவர் (மாற்கு 3:17). யேசுவால் அன்பு செய்யப்பட்ட முதன்மையான சீடர் மூவரில் இவரும் ஒருவர் ஏனைய சீர்களிடமிருந்து தனிமையாக யோவான், பேதுரு, யாக்கோப்பை யேசு தனது உருமாற்ற நிகழ்வின் போதும் (மத்தேயு 17:1, மாற்கு 9:2), யாயீரின் மகளை குணப்படுத்தும் போதும் (மாற்கு 5:37), ஜெத்தமனித் தோட்டத்தில் செபிக்கும்போதும் (மாற்கு 14:13) தம்மோடு அழைத்துச் செல்கிறார். யோவான் நற்செய்தியில் இவர் யேசுவின் அன்புச்சீடராக குறிப்பிடப்பட்டுள்ளார் (யோவா. 13:23,25 19:26-27 20:2-5,8 21:7, 20-24) இறுதி இராவுணவின் போது யேசுவின் அருகில் அவர் மார்பு பக்கமாய் சாய்ந்திருந்தவர் (யோவா. 13:23,25). யேசு கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது யேசுவை பின் தொடர்ந்தவர். யேசு சிலுவையில் தொங்கிய போது அவர் அருகில் நின்ற ஒரே ஒரு சீடன். யேசு தன் தாயிடம் இவரை மகனாக ஒப்படைத்தார். தன் தாயை இவருக்குத் தாயாக கொடுத்தார் (யோவா. 19:26). யேசுவால் தனியன்பு செய்யப்பட்ட யோவான் யேசுவை இறுதி வரைக்கும் அன்பு செய்தார். யேசுவினுடைய துன்பவேளையிலும், மரணவேளையிலும் உடன் இருந்து ஆறுதல் கொடுத்து தனது அன்பை வெளிப்படுத்தினார்.

யேசுவின் கல்லறை வாயில் அகற்றப்பட்டிருந்த செய்தியை மகதலா மரியாளினூடாக அறிந்த சீடர்கள் பேதுருவும் யோவானும் கல்லறைக்குச் செல்ல இருவரும் ஒருமித்து ஓடினர். இளைஞனான யோவான் பேதுருவை விட மிகவிரைவாக ஓடி முதலில் கல்லறையை அடைந்தார். ஆனால் கல்லறைக்குள் நுளையவில்லை. பின்னர் வந்த பேதுருவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகைக்காக காத்திருந்தார். பேதுரு கல்லறையை வந்தடைந்ததும் கல்லறைக்குள் நுளைந்தார். அவரைத் தொடர்ந்து யோவானும் சென்றார். யோவான் முதலில் கல்லறையை அடைந்தும் உள்ளே செல்லவில்லை காரணம் அவர் பேதுருவின் முதன்மை யான சீடத்துவத்தை, முதன்மையான சாட்சியத்தை, தலைமைத்துவத்தை, முதுமையை மதித்தார் அவருக்கு முன்னுரிமை கொடுத்தார்.



## ஸ்தேவான்

திருத்தூதர்களினால் தேர்தெடுக்கப்பட்ட முதல் ஏழு திருத்தொண்டர்களில் ஸ்தேவான் முதன்மையானவர். தொடக்க திருச்சபையில் கிரேக்க மொழி பேசும் கிறிஸ்தவர்கள் தம் கைம்பெண்கள் அன்றாடம் பந்தியில் முறையாக கவனிக்கப்படவில்லை என்ற உணர்வை வெளிப்படுத்தினார். இதனால் இக்குறையை நீக்க திருத்தூதர்கள் நற்சான்று பெற்றவர்களும் தூய ஆவி அருளும் வல்லமையும் ஞானமும் நிறைந்தவர்களுமான எழுவரை திருத்தொண்டர்களாக தெரிந்தெடுத்தனர். இவர்களுள் ஸ்தேவானின் பெயர் முதன்மையிடத்தை பெறுகிறது (திபா. 6:5). ஸ்தேவான் தொடக்க கிறிஸ்தவ சமூகத்திலே நன்மதிப்பும், நற்சான்றும் பெற்ற ஒருவராக திகழ்ந்தார். அறப்பணியாற்ற முழுவிருப்புபோடு தன்னை அர்ப்பணித்து ஏழைகளுக்கும், கைவிடப்பட்டடோருக்கும், கைம்பெண்களுக்கும் அன்புப் பணியாற்றினார்.

கிறிஸ்துவுக்காய் இரத்தம் சிந்தி வேதசாட்சியாக மரணித்தவர்களில் ஸ்தேவான் முதன்மையானவர். ஸ்தேவானின் ஞானத்தையும் தூய ஆவி வழியாக அவர் பேசிய வார்த்தைகளையும் எதிர்த்து நிற்க முடியாதவர்கள் அவருக்கெதிராக மக்களைத் தூண்டியும் பொய்ச்சாட்சி சொல்லியும் அவரை தலைமைச் சங்கத்திற்கு இழுத்துச் சென்றனர். ஆனால் ஸ்தேவான் துணிவுடன் அவர்களை எதிர்த்து உண்மையை எடுத்துக் கூறினார். அவர்களையும் அவர்களது மூதாதையர் செய்த தீமைகளையும், அநீதிகளையும் சுட்டி காட்டினார். “திமிர் பிடித்தவர்களே இறைவார்த்தையைக் கேட்க மறுக்கும் செவியும் ஏற்க மறுக்கும் உள்ளமும் கொண்டவர்களே ... நீங்கள் யேசுவை காட்டி கொடுத்து கொன்று விட்டீர்கள்...” (தி.பா. 7:51-53) என உண்மையை துணிவுடன் எல்லோர் முன்பு எடுத்துரைத்தார். இதனால் அவர்கள் கோபம் கொண்டு அவரை கல்லால் எறிந்து கொன்றனர். ஸ்தேவான் உண்மையை, நீதியை அஞ்சா துணிவுடன் தனது உயிர்பிரியும் வரையும் எடுத்தியம்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய இளையோருக்கான அழைப்பு

1. யோசேப்பு தன்னை வெறுத்து துன்புறுத்திய தன் சகோதரர்களை மன்னித்து ஏற்றுக்கொண்டார். இன்றைய இளையோரும் பிறருக்கு தீமை, அநீதி செய்வதை தவிர்ப்பவர்களாகவும், தமக்கெதிராக தீமை செய்பவர்களை பழிவாங்காது மன்னித்து ஏற்றுக் கொள்கின்றவர்களாகவும் வாழவேண்டும்.

2. யோசேப்பு தன் கற்புக்கெதிராக ஏற்பட்ட சோதனையை வென்றார். இன்றைய நவநாகரீகம், நவீன உலகம் என்ற போர்வையில் இளையோரின் உள்ளத்தில் ஏற்படும் கீழ்தரமான சிந்தனை, ஆடை, அலங்காரம் என்பனவற்றில் ஏற்படும் மாற்றங்கள், விளம்பரம், இணையத்தளங்களில் காணப்படும் ஆபாச காட்சிகள் இன்றைய இளையோரின் கற்பு நெறிக்கு சவாலாக, சோதனையாக அமைகின்றன. இச்சாவால்களை மனக்கட்டுப்பாட்டுடன் எதிர்த்து கற்பு நெறியில் வாழவேண்டும்.

3. தானியேல் பல எதிர்ப்புகள், துன்புறுத்தல்கள் மத்தியிலும் தன் இன மத ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடித்தார். இன்றைய இளையோரும் தம் இனத்திற்கெதிராக மதத்திற்கெதிராக மேற்கொள்ளப்படும் அடக்கு முறைகளைக் கண்டு அஞ்சாது தம் இனத்தினது பண்பாட்டையும், ஒழுக்க விழுமியங்களையும் கடைப்பிடிப்பவர்களாகவும், தம் மதக் கோட்பாடுகளை கடைப்பிடித்து இறைநம்பிக்கை உடையவர்களாக வாழ வேண்டும்.

4. தானியேல் ஞானம், அறிவு, ஆற்றல் அவரை அரச உயர் நிலையில் பணியாற்ற வைத்தது. இன்றைய இளையோரும் தமக்குள் இருக்கும் ஆற்றல் திறமைகளை இனம்கண்டு அதை வளர்ப்பவர்களாகவும், அறிவிலும் ஞானத்திலும் சிறந்து விளங்கி விவேகமுடையவர்களாக சமூகத்தில் நற்பணியாற்ற வேண்டும்.

5. யோவான் தன்னை அன்பு செய்த யேசுவை இறுதிவரைக்கும் அவரது துன்பமான சிலுவை மரணவேளையிலும் உடன் இருந்து தன் அன்பை வெளிப்படுத்தினார். இன்றைய இளையோரும் பிறரை அன்பு செய்கிறவர்களாகவும் தம்மை அன்பு செய்கிற பெற்றோரை, சகோதரர்களை, நண்பர்களை அன்பு செய்கிறவர்களாகவும், அவர்களது துன்பவேளையில் உடன் இருந்து, தம் அன்பையும் ஆறுதலையும் வெளிப்படுத்துகிறவர்களாகவும் வாழ வேண்டும்.

6. யோவான் பேதுருவின் தலைமைத்துவத்தையும் அவருடைய முதிர்ந்த அனுபவத்தையும் மதித்து செயற்பட்டார். இன்றைய இளையோர் வலிமையுடையவர்களாக, அறிவாற்றல் உடையவர்களாக, இருந்தாலும் தம் பெற்றோர், ஆசிரியர்கள், குருக்கள், சமூகத்தலைவர், பெரியவர்களை மதிக்கிறவர்களாகவும் அவர்களின் வழிகாட்டல்களுக்கு செவிமடுப்பவர்களாகவும் திகழ வேண்டும்.

7. ஸ்தேவான் தொடக்க கிறிஸ்தவ சமூகத்தில் நற்சான்று பெற்றவராய் அறப்பணியில் ஈடுபட்டார். இன்றைய இளையோரும் தம் வாழ்வாலும் நடத்தையாலும் சமூகத்தில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்சான்று பெற்றவர்களாக சமூகத்தில் துன்பப்படுகின்ற ஏழைகள், கைவிடப்பட்டோர், நோயாளர் மீது பரிவு கொண்டு அன்புப்பணியாற்ற முன் வர வேண்டும்.

8. ஸ்தேவான் எதற்கும் அஞ்சாது பொய்குற்றச் சாட்டுக்களை எதிர்த்து உண்மை நீதியை துணிவுடன் எடுத்துரைத்தார். இன்றைய இளையோரும் அநீதிக்கும் பொய்மைக்கும் அடிபணியாது, உண்மைக்கும் நீதிக்கும் எதிராக வரும் சவால்களை எதிர்த்து துணிவுடன் சான்றுபகர வேண்டும்.

## முடிவுரை

இன்றைய உலகின் பொருள்சார்ந்த சிந்தனைப்போக்கு, வன்முறையை தூண்டும் அடக்குமுறைகள், பிரிவினைக் கொள்கைகள், கட்டுப்பாடற்ற நவீன தொடர்பாடல்கள், இணையத்தள வசதிகள் கடவுளை மறந்து மனிதனை மட்டும் மையப்படுத்திய வாழ்வு என்பன இன்றைய மனிதனின் விழுமிய வாழ்வுக்கு, ஆரோக்கியமான, அமைதியான நல்வாழ்வுக்கு சவால்களாக அமைந்துள்ளன. குறிப்பாக இன்றைய இளையோர் இச்சவால்களை எதிர்கொள்ள முடியாது தடுமாறி வீழ்ந்து தம் எதிர்கால நல்வாழ்வை தொலைத்து விடுகின்றனர். இந்நிலையில் விவிலியத்தில் காண்கின்ற யோசேப்பு, தானியேல், யோவான், ஸ்தேவான் என்போரின் முன் உதாரணமான வாழ்க்கைப் பண்புகள் வலுவூட்டும் நல்ல பாடங்களாக கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வின் விழுமியங்களாக அமைந்துள்ளன. இப்பாடங்களை இன்றைய இளையோர் வாழ்வாக்கும் போது தம் வாழ்வில் ஏற்படும் சவால்களை எதிர்கொண்டு நற்பண்புள்ளவர்களாக வாழமுடியும். "இன்றைய இளையோர் நாளைய தலைவர்கள்" இவர்களின் இன்றைய ஒழுக்கவாழ்வு தான் நாளைய தலைமுறையினருக்கு நற்சான்றாக அமையும் நாளைய சமூகம் நல்லொழுக்க சமூகமாக மாறுவதும் இன்றைய இளையோரின் கரத்தில்தான் உள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும், தீர்வுகளும்

அருட்பணி. A. A. நவரெட்ணம்
விரிவுரையாளர்
கிறிஸ்தவத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முன்னுரை:

இன்றைய உலக வாழ்வே இளைஞர்களால் நிறைந்ததாகும். அதிலும் வளர்ச்சியடைந்து வருகின்ற ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் சனத்தொகையில் கணிசமான இடத்தினை இளைஞர்கள் நிரப்புகின்றார்கள். இவர்களிடத்தில் சில குறைபாடுகள், பலவீனங்கள் காணப்பட்டாலும், பல்வேறு நவீன துறைகளில் திறமைகளோடும், ஆற்றல்களோடும் வளர்ந்துகொண்டே வருகின்றார்கள். இளைஞர்களையும், அவர்களது ஆற்றல்களையும், திறமைகளையும் குறித்து உலகமே வியந்து நிற்கின்றது. இதனாற்தான் மறைந்த திருத்தந்தை இரண்டாம் யோன் பவுல் அவர்கள் "இளைஞர்களே, நீங்கள் இல்லாமல் திருச்சபை என்ன ஆகும்?" என்று கேள்வி எழுப்புகின்றார். பேரறிஞர் அண்ணா தமது வார்த்தைகளில் "இளைஞர்கள் நாட்டின் தீட்டின முனைகள், முற்போக்குச் சிந்தனையாளர்கள், முனைப்பு உள்ளவர்கள்" என்று அவர்களைக் குறித்து சான்று பகர்கின்றார். மேலும் "துடிப்பும், ஆர்வமுள்ள பத்து இளைஞர்களை என்னிடம் தாருங்கள் இந்த உலகத்தை மாற்றிக் காட்டுகின்றேன்" என்றார் சுவாமி விவேகானந்தர். எனவே இளையோர் உலகம் துடிப்புமிக்கது, உயிரோட்டம் நிறைந்தது, செயற்திறன் கொண்டது. இவ்வுலகத்தில் அவர்களால் முடியாதது ஒன்றுமில்லை. ஏனெனில், குழந்தைகளுக்கு எதிர்காலம் மட்டுமே உள்ளது. முதியோருக்கு இறந்தகாலம் மட்டுமே உள்ளது. இளையோருக்கு முக்காலமும் உரியது. இத்தகைய வீரியமும், முனைப்பும் கொண்ட இளையோர் உலகம் இன்று பல்வேறு தரப்பட்ட பிரச்சனைகளால் சூழப்பட்டுள்ளது. அவ்வாறான பிரச்சனைகளால் பலரது வாழ்வு சூனியமாகிவிட்டது. இன்னும் பலர் அத்தகைய நிலைமைக்கு நாளாந்தம் தள்ளப்படுகின்றார்கள். இத்தகையதோர் எதிர்மறையான சூழ்நிலையில் இளைஞர்கள் நாளாந்த வாழ்வில் சந்திக்கும் பிரச்சனைகளை இனம்காண்பது, அதற்கான தீர்வுகளை என்று சொல்வதைவிட ஆலோசனைகளை கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் முன்வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவ இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள்:

அண்மையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் இருபத்தைந்து (25) கத்தோலிக்க, கிறிஸ்தவ மாணவர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் கீழ்வரும் பிரச்சனைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இளைஞர்களின் பிரச்சனைகளை இலகுவில் அடையாளம் காணும் வகையில் பின்வரும் இரண்டு வினாக்கள் அவர்களிடம் கொடுக்கப்பட்டன. அவையாவன முறையே, முதலாவதாக, ஓர் இளைஞனாக/ யுவதியாக சமூகத்தில் நீர் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் யாவை? இரண்டவதாக, ஒரு கிறிஸ்தவ இளைஞனாக/யுவதியாக கிறிஸ்தவ வாழ்வில் நீர் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் யாவை? என்பனவாகும். கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு மாணவர்கள் மிகவும் ஆர்வமாக பதில் கொடுத்தமை அவர்களது உள்ளக்கிடக்கைகளை வெளிக்கொணர வாய்ப்பாகியது. அந்தவகையில் அவ்விடைகளை இரண்டு பிரிவுகளில் அடையாளப் படுத்துகின்றேன்.

## சமூகவாழ்வில் இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள்:

1. வேலைவாய்ப்பின்மை (வேலையில்லாப் பட்டதாரிகள், படித்தும் தொழில் இல்லாத சூழ்நிலை)
2. பொருளாதாரப் பிரச்சனைகள்
3. தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாதல் - மது, மாது, போதைவஸ்து, கொள்ளை, கொலை, நீலப்படங்கள், சினிமா
4. பெற்றோரின் அதிதீவிர கட்டுப்பாடு, வெறுப்பு, அரவணைப்பின்மை
5. தீய நட்புக்கள்
6. அரசியல் நெருக்கடிகள், வேலைவாய்ப்புக்களிலும், வேறு செயல்களிலும் ஊழல், இலஞ்சம் போன்றவை தலைவிரித்தாடல்
7. போட்டி மனப்பான்மையும், பணம் படைத்தவர்களுக்கு முன்னுரிமையும், புறம் தள்ளப்படுகின்ற சூழ்நிலைகளும்
8. காதல் வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளும், தொல்லைகளும்
9. திருமண வாழ்வு வறுமை, சீதனப்பிரச்சனை போன்றவற்றால் தடை
10. பெண்கள் சமூகவாழ்வில் புறம் தள்ளப்படுதலும், பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகளும்
11. நவீன தொழில்நுட்ப கலாசாரத்தின் வருகையும், அதனால் ஏற்படுகின்ற சிக்கல்களும் - (அலைபேசி Cell phone, இணையம் Internet, Face book, Skype இன்னும் பல)
12. ஆடை அணிகலன்களில் ஏற்பட்டுள்ள மாற்றம் கலாசார சீர்கேடுகளுக்கு வழிவகுத்துள்ளது
13. நண்பர்களுக்கிடையிலான கருத்து முரண்பாடுகள், உண்மைத் தன்மையற்ற தன்மை, நம்பிக்கைத் துரோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. அரசியல் வாதிகளிடமிருந்தும், வேறுபலர் மத்தியிலிருந்தும் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் அதன் விளைவாக உளரீதியான தாக்கங்கள்
15. இளையோர் குறித்த சமூகப் பார்வைகள், குறிப்பாக வயது முதிந்தோர் தம்மை ஏற்றுக்கொள்ளாத் தன்மை

இவை போன்ற இன்னும் பல காரணிகள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

## கிறிஸ்தவ வாழ்வில் இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள்:

1. வழிபாட்டு முயற்சிகளில் ஆர்வமின்மை
2. பல்வேறு திருச்சபைகள், பல்வேறு வழிபாட்டு முறைமைகளால் குழப்பநிலை
3. பழைமையான முடிவுகளுக்கு கட்டுப்படுத்தப்படல் - வழிபாட்டு முறைகள் - உதாரணமாக, தலைக்கு முக்காடிட கட்டாயப் படுத்தப்படல்
4. கிறிஸ்தவ நெறியினை பின்பற்றுவதில் தடைகள், உரிமைகள் மறுக்கப்படல்
5. பங்குத் திருச்சபை வாழ்வில் பங்கேற்க முடியாத சூழ்நிலைகள்
6. இருமத திருமணங்கள் காரணமாக வெறுப்பும், சண்டையும், மதமாற்றப் பிரச்சனைகளும்
7. கிறிஸ்தவர்கள் என்கின்ற ரீதியில் சிறுபான்மையினராக புறம் தள்ளப்படல்
8. சரியான ஆன்மீக, உளநல வழிகாட்டல்கள் கிடைக்காமை
9. அடுத்தவர்களால் எள்ளி நகையாடப்படல்
10. குருக்கள், துறவறத்தார் குறித்த தவறான சிந்தனைகளும், போக்குகளும்
11. சுரூப, புனிதர் வழிபாடு குறித்த சரியான தெளிவின்மை
12. ஆடம்பர, லௌகீக வாழ்க்கை முறைகள்
13. மதங்களுக்கிடையிலான குரோதங்களும், அதனால் ஏற்படும் வாக்குவாதங்களும்
14. கிறிஸ்தவ அமைப்புக்களின் உதவிக்கரம் கிடைக்காமை

இவை போன்ற இன்னும் பல காரணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேற்சொல்லப்பட்ட பிரச்சனைகள் ஒரு சில இளைஞர்கள், யுவதிகளால் அடையாளம் காணப்பட்டாலும் அவை ஒட்டுமொத்த இளையோர் சமூகத்தையே பாதிப்பவையாகும். அந்தவகையில் மேற்சொல்லப்பட்டவையும், இவை சார்ந்த இன்னும் பலவும், இன்றைய இளையோர் வாழ்வை பாதிக்கின்றன என்றால் மிகையாகாது.

## இயேசுகிறிஸ்து என்னும் இளைஞனும் அன்றைய பிரச்சனைகளும்:

இன்றைய கிறிஸ்தவ இளைஞர்களின் பிரச்சனைகளை ஆராயும்போது அன்றைய பாலஸ்தீனாவில் வாழ்ந்த இயேசு என்னும் இளைஞனை விலக்கிவிட்டு நாம் விடைகாண முயன்றால் அபத்தமாகும். இயேசு இவ்வுலகில் ஓர் இளைஞனாக (மனிதனாகவே) வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியத்தின்படி 30 – 33 வயது வரையுள்ள மூன்று வருடம் இளைஞனாக பணியாற்றினார். அந்த இளைஞன் பாலஸ்தீனாவின் தெருக்கோடிகளில் பணியாற்ற இறங்கியபோது பல்வேறான தடைகளுக்கு முகம் கொடுத்தார். ஆனாலும் அவற்றைக்கண்டு பின்வாங்கவில்லை, மாறாக மனவலிமையோடு எதிர்கொண்டார். முன்வைத்த காலை பின்வாங்காது புரட்சிப்பணி பாரில் புரிந்தார். இயேசு என்னும் இளைஞன் சந்தித்த பிரச்சனைகளுக்கு எல்லையே கிடையாது. ஆயினும் அவர் மனம் தளரவில்லை, மாறாக அஞ்சா நெஞ்சுடன் தன்னை எதிர்கொண்ட சவால்களைச் சந்தித்தார். தோற்கவில்லை, வெற்றியும் கண்டார். அந்தவகையில் இயேசு தம்வாழ்வில் சந்தித்த பிரச்சனைகளையும், அவற்றிற்கு அவர் கொடுத்த விடையினையும் நோக்கினால், நமது கிறிஸ்தவ வாழ்வுப் பயணத்தைப் புரிந்து கொள்ளலாம். இயேசுவின் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சில சம்பவங்களை கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.

1. இயேசுவின் பணிவாழ்வின் தொடக்கம் அலகையின் சோதனையாகும். (மத் 4: 1-11, மாற் 1: 12-13, லூக் 4: 1-13) ஆயினும் அவர் அலகையை தமது செற்போர்க்கனை கொண்டு வெற்றி கண்டார்.
2. இயேசு முடக்குவாதமுற்றவரைக் குணப்படுத்தியபோது மறைநூல் அறிஞர்கள் 'பாவங்களை மன்னிக்க இவர் யார்?' எனச்சீறி எழுந்தார்கள். (மத் 9: 1-8, மாற் 2: 1-10, லூக் 5: 17-26) ஆயினும் அவரின் நோய்களை குணமாக்கும் பணி தொடர்ந்தது.
3. சுங்கத்துறையில் வரிவசூலிப்பராகிய மத்தேயுவை தமது சீடராக அவர் அழைத்தபோது, அவருக்கெதிரான குற்றச்சாட்டு 'வரிதண்டுபவர்களோடும், பாவிகளோடும் சேர்ந்து உண்பது ஏன்? (மத் 9: 9-13, மாற் 2: 13-17, லூக் 5: 27-32) ஆயினும் ஏழைகளின், பாவிகளின் தோழமை புனிதப்பயணமாகத் தொடர்கின்றது.
4. ஓய்வு நாளில் சூம்பிய கையுடயவனை குணமாக்கியபோது 'ஓய்வு நாளில் குணமாக்குதல் முறையா?' என்று மறைநூல் அறிஞரும், பரிசேயரும் கேள்வி எழுப்பினர். (மத் 12: 9-14, மாற் 3: 1-6, லூக் 6: 6-11) ஆயினும் அவர் ஓய்வுநாளும் மனிதனுக்குட் பட்டதே என்று புரட்சி செய்தார்.
5. சீடர்கள் மூதாதையரின் மரபினை மீறுவதாக பரிசேயரும், மறைநூல் அறிஞரும் குற்றம் சாட்டினார்கள் (மத் 15: 1-20, மாற் 7: 1-23) ஆயினும் இயேசு எனும் இளைஞன் எது மனிதனைத் தீயதாக்கும் என்று புதுப்போதனை தருகின்றார்.
6. இயேசுவின் சீடர்களே அவரைப் புரிந்துகொள்ள முடியாமற் தங்களுக்குள் யார் பெரியவரென வாக்குவாதப் படுகின்றார்கள். (மத் 18: 1-5, மாற் 9: 33-37, லூக் 9: 46-48) ஆயினும் இயேசு சீடத்துவத்தின் உண்மையினை படம்போட்டு வைக்கின்றார்.
7. ஜெருசலேம் ஆலயம் நுழைந்த இயேசு அங்கு காண்பது கேளிக்கை, வியாபாரம், இன்னும் பற்பல செயல்கள் (மத் 21: 12-17, மாற் 11: 15-19, லூக் 19: 45-48, யோவா 2: 13-22) ஆயினும் செயல்வீரர் இயேசு ஆலயத்திற்கும், வழிபாட்டிற்கும் புது அர்த்தம் கற்பிற்கின்றார்.
8. இறுதியில் அவரது பாஸ்காப் பயணத்தில் எத்தனை சரிவுகள், பின்னடைவுகள், தலைமைச்சீடர் பேதுறு மறுதலித்தார், யூதாசு காட்டிக்கொடுத்தான், சீடர்கள் சிதறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடினார்கள், மக்கட்கூட்டம் 'ஒழிக, ஒழிக' என்று கத்தினார்கள். ஆயினும் அவர் 'தந்தையே, இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை' (லூக் 23:34) என்றுகூறி தளராமல் புனிதப்பயணம், மீட்புப்பயணம் தொடர்ந்தார்.

எனவே இளைஞன் இயேசுவின் வாழ்வு பிரச்சனைகளைக்கண்டு புறமுதுகிட்ட வாழ்வு கிடையாது. மாறாக திறந்த நெஞ்சுடனும், நேரிய பார்வையுடனும் வாழ்வின் சவால்களைச் சந்தித்த வாழ்வு. அதுவே இளைஞர்களுக்கு வழிகாட்டும் பாதையாகட்டும்.

## இன்றைய இளைஞர்களின் பிரச்சனைகளும், ஆலோசனைகளும்:

சிக்கல்கள், பிரச்சனைகள் இல்லாத வாழ்வினை இன்று நாம் கண்டுபிடிக்க முடியுமா? எங்கும், எதிலும் பிரச்சனைகள் உண்டு. அண்மைய பாடல் வரியொன்று 'ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே வாழ்வென்றால் போராடும் போர்க்களமே, ஒவ்வொரு விடியலுமே சொல்கிறதே இரவானால் பகலுண்டு வாழ்வினிலே'. எனவே பிரச்சனைகளை நாம் எதிர்கொள்ள வேண்டும். அதிலும் இளைஞர்கள் அவற்றை விசேடமான முறையில் எதிர்கொள்ள வேண்டும்.

அறிஞர் டொனால்ட் மக்மிலன் (Donald MacMillan) என்பவர் பூமியைச்சுற்றி பயணம்செய்து ஆராய்ந்தவர். பேராபத்துமிக்க வடதுருவப் பயணத்தை மேற்கொள்ள ஆயத்தமானார். கிளம்ப சில மணித்துளிகளுக்குமுன் அவருக்கு ஒரு கடிதம் வந்தது. பார்த்தார். அதன் உறையில் இவ்வாறு எழுதியிருந்தது. "வாழ்வில் உங்களால் தாக்குப்பிடிக்க முடியாதபடி பிரச்சனை ஏற்படும்போது இதைத் திறந்து பார்க்கவும்...!" கடிதத்தைப் பத்திரப்படுத்திக் கொண்டு பயணமானார். வெற்றிகரமாகப் பயணத்தை முடித்துவிட்டு திரும்பியும் விட்டார். ஐம்பதாண்டுகள் பறந்தோடிப்போயின. ஆனால் அந்தக் கடிதத்தைப் பிரிக்காமல் அப்படியே பத்திரமாய் வைத்திருந்தார். உற்றுக் கவனித்துக்கேட்ட ஓர் உற்ற நண்பருக்கு அறிஞர் டொனால்ட் பதிலளித்தார். "நண்பரே! என்னால் தாக்குப்பிடிக்க முடியாதபோது இது உதவும் என்றுதான் யாரோ ஒரு நண்பர் அதை அனுப்பியிருக்கிறார். அது அவரது நம்பிக்கை. அதனாற்தான் பத்திரமாய் வைத்திருக்கின்றேன்" தொடர்ந்தார். 'ஆனால்... எந்தப் பிரச்சனையையும் என்னால் தாக்குப்பிடிக்க முடியும். அது எனது நம்பிக்கை. எனவே இன்னமும் அதனைப்பிரித்து பார்க்காமல் அப்படியே வைத்திருக்கின்றேன்'. இத்தகைய நம்பிக்கைதான் இளையோர்கள் பிரச்சனைகளை எதிர்கொள்ளவும், சாதிக்கவும் தேவையானது. நம்பிக்கையினை தூண்டும் படியாக பல விடயங்களை கூறலாம். ஆயினும் நமது வாழ்வில் பிரச்சனைகளை சந்திக்க ஆயத்தமாக இருக்கின்றோமா? இன்றே ஆயத்தமாவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை:

இன்றைய (கிறிஸ்தவ) இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை நோக்குகின்றபோது, அவர்களுக்கு குடும்பங்களின், சமூகங்களின், பங்குத்திருச்சபைகளின் ஆதரவு மிகவும் தேவையானதொன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இளைஞர்கள் தவறான பாதையில் செல்வதற்கும், பிழையான முடிவுகளை மேற்கொள்வதற்கும் பலவேளைகளில் அவர்களைச் சார்ந்த புறச்சூழல் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்து விடுகின்றன. இத்தகைய பின்னணியில் அவைகுறித்து அவைசார்ந்த அமைப்புக்களும், குழுக்களும் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

மறுபக்கத்தில் இளைஞர்கள் வீறுகொண்ட சக்திகளாக எழவேண்டும். வாழ்வில் தீர்வுகளற்ற சிக்கல்கள் கிடையாது என்பதனை உணரவேண்டும். சிலவேளைகளில் தவறலாம். அதற்காக வருந்தத் தேவையில்லை. 'ஏழுமுறை வீழ்ந்ததை நினைப்பதைவிட எட்டாவது முறையாக எழுந்ததைக் கண்டு மகிழ்ச்சிகொள்' என்கிறது ஜப்பான் நாட்டுப்பழமொழி. தோல்வி என்பது நிரந்தரம் கிடையாது. கருமுகில் கூட்டம்கூட கலைந்து செல்லுமாற்போல், வாழ்வில் பிரச்சனைகள் என்பது நிரந்தரம் கிடையாது. எனவே உறுதியுடன் எதிர்கொள்ள கிறிஸ்தவ இளைஞன்/யுவதி தயாராக வேண்டும். 'வாழ்விலொரு பிடிப்பிருந்தால் அந்த வானமும் வசப்படும்' என்பதற்கொப்ப சவால்களைச் சந்திப்போம்! சமாளிப்போம்!! சாதனையாக்குவோம்!!!

இளையோர்களின் நண்பரெனப் போற்றப்படும் இரண்டாம் யோன் பவுல் பாப்பிறையவர்கள் 'இளைஞர்களே நீங்கள்தான் திருச்சபையின் நம்பிக்கை, இளைஞர்கள் இல்லாத திருச்சபையைக் கற்பனை செய்து பார்க்க முடியாது' என்று இளைஞர்களுக்கு புகழாரம் சூட்டுகின்றார். எனவே கிறிஸ்தவ இளைஞர்கள் தங்களது கிறிஸ்தவ அழைத்தல் வாழ்வில் பயணிக்க தினமும் முன்வர வேண்டும். தடைகோடி வரலாம். தடைதாண்டி நடைபயில இயேசுகிறிஸ்துவின் வீரியமான வழிகாட்டலும், துணையும் என்றும் இருக்கின்றது. இயேசுவின் வழியில் வரலாற்றில் அவரது செயல்வீரர்களின் (புனிதர்கள்) வாழ்க்கை மாதிரிகை உங்களுக்குள்ளது (தொன்பொஸ்கோ, டொமினிக் சாவியோ, மக்ஸ்மில்லியன் மரியகோல்பே, குழந்தையேசுவின் திரேசா, இன்னும் எத்தனையோ புனிதர்கள்).

எனவே இலட்சிய வீரன் இயேசுவின் பின்பு படையணி கோர்க்கின்ற எந்தவொரு இளைஞனும், யுவதியும் வாழ்வில் எதிர்கொள்கின்ற பிரச்சனையைக்கண்டு அஞ்சத் தேவையில்லை, பயம் கொள்ளத் தேவையில்லை, மாறாக, வெற்றிப்பயணம் தொடரலாம். நம் இன்றைய திருத்தந்தை 16ம் பெனடிற் 'இளைஞர்களே, நீங்கள் எதிர்காலத் திருச்சபையின் செல்வங்கள் அல்ல, மாறாக, இன்றைய திருச்சபையின் செல்வங்கள்' என்று கூறுகின்றார். எனவே கிறிஸ்தவ இளைஞர்களே, நாளைக்காக காத்திராமல், இன்றைய நிகழ்கால செயல்வீரர்களாக பிரச்சனைகளை ஊடறுத்து இயேசுவின் வழியில் வெற்றி காணுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பாலியற் கல்வி பற்றி சமூதாய, அரசியல், திருச்சபையின் நிலைப்பாடு"

அருட்திரு நோயல் இம்மானுவேல்,
திருகோணமலை.

## முன்னுரை

ஒரு மனிதரின் முழுமையான வளர்ச்சிக்கு அவரது உடல், சமூக, உளவியல், கலாசார, சமய விழிப்பும் வழிகாட்டலும் அவசியமாகிறது. இந்த வளர்ச்சியில் இவரது கடமை, பொறுப்பு பற்றிய தெளிவும் சமூக பங்களிப்பும் தேவை. இந்த விழிப்பையும் தெளிவையும் ஒருவரால் ஓரளவு சுயமாகவும் சூழ உள்ளோரின் உதவியுடனும் பெற்றுக்கொள்ளலாம்.

வாழ்வில் பட்டுத் தெளிவது என்பது முக்கியம். ஆனால் வாழ்வில் எல்லா விடயங்களையும் பட்டுத் தெளிவதற்கு விட்டுவிட முடியாது. ஏனெனில் அதன் விளைவுகள் விபரீதமாகிவிடும்.ஒரு குழந்தைக்கு நெருப்பால் வரக்கூடிய ஆபத்தை பட்டுத் தெளியட்டும் என விட்டுவிட முடியாது. ஓரளவு சுய அனுபவத்தோடு பெற்றோரின் வழிகாட்டலும் கண்டிப்பும் அவசியம். முழுமனித வளர்ச்சியில் பல அம்சங்கள் அடங்கியிருந்தாலும் அதில் ஒரு முக்கிய விடயமாகிய பாலியற் கல்வியை எமது ஆசிய சமூகத்தில் ஒருவர் பெற்றுக்கொள்வது மிகக் குறைவென்றே கூறலாம். ஒரு ஆணோ, பெண்ணோ தனது வளர்ச்சியின்போது உடலிலே ஏற்படுகின்ற மாற்றங்களை உணர்ந்தாலும் அவற்றை இன்னொருவரோடு பகிர்ந்து கொள்ள வெட்கப்படுவர் அல்லது கூச்சப்படுவர். இவ்வாறு பகிர்ந்தாலும் சரியான விளக்கமும் வழிகாட்டலும் தர ஏனையவர்கள் தயங்குவார்கள். ஒரு பெண் தனது உடலில் ஏற்படும் மாற்றங்களைத் தன் தாயிடம் நம்பி சொல்லலாம். ஆனால் அவரது தாய் தரும் விளக்கம் மட்டும் போதுமானதா? அந்த விளக்கம் பாலியல் பற்றிய அனைத்துத் தெளிவுகளையும் கொடுக்குமா?



முழுமனித வளர்ச்சியில் பல விடயங்கள் உள்வாங்கப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு விடயம் பற்றிய அறிவு மிக முக்கியம். அப்போதுதான் ஒருவர் பொறுப்போடு தனிமனித.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய சூழலைப் புரிதல்

போர்க்காலம் எப்படி இளைஞர்கள் மீது தனது நேரடிப் பாதிப்பை செலுத்தியதோ அதைவிட அதிகமாகவே போரின் பின்னான காலம் இளைஞர் மீது நேரடியாகவும் [illegible]கவும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது. போர்க்காலத்தில் இளையோர்கள் ஒ[illegible]த்துக்கான போர்ச்சுமையை தமது தோள்களிலே நேரடியாகச் சுமக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அதனால் அவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு, வளமான வாழ்வு, என்பவற்றைத் துறந்து போராடவேண்டியவர்களாக மாற்றப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானோர் தமது இன்னுயிரையே தியாகம் செய்தார்கள். இன்னும் பலர் போரின் வடுக்களை இன்றும் தமது உள்ளங்களிலும் உடல்களிலும் சுமந்தவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள்.

போரின் பின்னான காலம் வித்தியாசமானது. அது போரின் சுமைகளை அவர்கள் மேலேற்றிவிட்டது. ஆனால் நளினமானதும் நவீனமானதுமான பல சுமைகள் நாசூக்காக அவர்கள் மீது ஏற்றிவிடபட்டிருக்கிறது. போரின் காலத்தில் பல்வேறு காரணங்களால் இவற்றை அறிந்திருக்காத எமது இளைய தலைமுறை இன்று தள்ளாடுகிறது. இவற்றை இங்கு பட்டியல் இட்டுப்பார்க்கலாம்.

## miss call கலாச்சாரம்

இன்றைய இளையோரின் இணைபிரியாத் துணையாக இடம் பிடித்து வலம் வருவது கைத்தொலைபேசி. எப்பொழுதுமே கைத்தொலைபேசிகளை நோண்டிக்கொண்டிருப்பது இன்று சாதாரணமாகக் காணக்கூடிய ஒரு விடயம். எனது வழிகாட்டலில் இயங்கும் பொதுநிலையினர் கழகத்தினர் கூட்டங்களுக்கு கடிதங்களை அனுப்பி வைப்பார்கள். ஆனால் இளையோர் கழகத்தினர் SMS களை அனுப்புவார்கள் அல்லது கைப்பேசி மூலம் அழைப்பு விடுவார்கள். ஆக இளையோரிடம் பெருகியுள்ள கைத்தொலைபேசி பாவனை அவற்றின் உயர் பயன்பாட்டிற்கு அப்பால் பல தொல்லைகளை அவர்களுக்கு உருவாக்கி வருகிறதை அறிய முடிகிறது. இளம் பெண்களினூடான ஒன்று கூடல் ஒன்றில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை பட்டியலிட்டு அவற்றை ஆய்வுக்காக முன்னுரிமைப்படுத்த பணித்தபோது அவர்கள் தேர்ந்தெடுத்த விடயம் கைத்தொலைபேசிப் பாவனை. தமது கைத்தொலைபேசிகளே தமக்குப் பெரும் சிக்கலாவதை அவர்கள் உணர்ந்தே உள்ளார்கள். Miss call தொல்லைகள் இன்றைய இளையோரின் மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும்.

## இணையப் பாவனை

இணையம் வழியாக உலகம் வீடுகளுக்குள் வந்த காலம் மலையேறி இப்போது இணையம் வழி உலகம் இளையோரின் விரல் நுனிகளில் நடமாடும் காலம் வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாடு, கருக்கட்டல், மகப்பேறு, பொறுப்புள்ள பெற்றோர், குடும்பம், குடும்பத்தின் எதிர்காலம் போன்ற பல சிந்தனைகளுக்கும் திட்டங்களுக்கும் அடுத்தவரது முறையான வழிகாட்டல் ஒவ்வொருவருக்கும் தேவை. கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள, இணைந்து தமது திருமண வாழ்வையும் குடும்பத்தையும் திட்டமிட இவர்களுக்கு வழிகாட்டல்கள் தேவை. எது சரியான முடிவு அல்லது தாம் எடுக்கின்ற முடிவுகள் சரியானவையா, நாட்டு, சமய சட்டங்களுக்கு அமைவாக உள்ளனவா என்றறிய இவர்களுக்கு உதவி தேவை.

## முரண்பாடுகள்...

திருமணம், மகப்பேறு, குடும்பம் உருவாக்குதல் போன்றவை ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இருக்கும் உரிமை. ஆனால் இதுபற்றிய கருத்துகளையும் சட்டங்களையும் சமூகம், அரசியல், சமயம் ஒன்றுக்கொன்று முரணாக உலகிற்குக் கொடுக்கின்றன. இதில் நாம் காணும் சில உண்மைகளைப் பார்ப்போம்:

### 1. பல்வகை பாலியல் உறவு

- ஆண் - பெண் உறவு: பொதுவாகவே காலாகாலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்த உறவு முறை இது. திருமணத்தினூடாக அமையும் இந்த உறவையே திருச்சபை வலியுறுத்துகின்றது.
- ஓரினச் சேர்க்கை: இது ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் மேற்கொள்ளும் உறவையும் திருமணத்தையும் குறிக்கும். மேற்கு நாடுகளில் சில அரசுகள் இந்த உறவை அங்கீகாரம் செய்துள்ளன. சமூகம், அரசுகள் ஏற்றுக்கொண்டாலும் கிறிஸ்தவம் எப்போதும் இந்த உறவு முறைக்கு எதிராகவே இருந்துள்ளது.



### 2. வயதெல்லை:

சமூகமும் கிறிஸ்தவமும் சிறிது மாறுபட்ட திருமண வயதெல்லையைக் கொண்டிருந்தாலும் இதில் முரண்பாடான விளைவுகள் வர சந்தர்ப்பம் இல்லை.

### 3. உறவுகளுக்குள் திருமணம்

நெருங்கிய உறவினரை ஒருவர் திருமணம் செய்வதால் பிறக்கும் குழந்தை உடல் அங்கவீனமாகப் பிறக்க சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு என்பது உண்மை. திருச்சபை இக்கருத்தை வலியுறுத்தி வந்துள்ளது. ஆனால் சில அரசுகள் சமூக, கலாசார பின்னணிகளுக்கு இடம் கொடுத்து நெருங்கிய உறவினரிடையே திருமணத்திற்குத் தடைசெய்வதில்லை. உதாரணமாக. ஒரு பெண் தாய் மாமனைத் திருமணம் செய்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. கருத்தடைகள்



நாட்டின் வளர்ந்துவரும் சனத்தொகைப் பெருக்கத்தைக் கருத்தில்கொண்டு அரசு செயற்கைக் கருத்தடைகளை அறிமுகம் செய்து அவற்றை இலகுவாகப் பெற்றுக்கொள்ளவும் வழி செய்கிறது. ஆனால் திருச்சபை செயற்கை முறைக் கருத்தடைக்கு மறுப்புத் தெரிவித்து இயற்கை முறையில் குடும்பக்கட்டுப்பாட்டை ஆதரிக்கின்றது.

## 5. கருச்சிதைவு

மேற்குலகில் பல நாடுகளில் கருச்சிதைவை அரசுகள் அங்கீகரித்துள்ளன. இலங்கையில் கருச்சிதைவு அங்கீகரிக்கப்படவில்லை. ஆயினும் ஒரு தாயின் வயிற்றினுள் இருக்கும் சிசு நோயாளியாகவோ, உடல் அங்கவீனமாகவோ இருந்தாலும், பலாத்கார உடலுறவின் மூலம் ஒரு பெண் கருத்தாங்கியிருந்தாலும் கருச்சிதைவுக்கு அரசு அங்கீகரிக்கின்றது. இதை தெரிவுசெய்யப்பட்ட கருச்சிதைவு (Selected Abortion) என்பர்.

ஆனால் திருச்சபை எந்த சந்தர்ப்பத்திலும் கருச்சிதைவை கண்டிப்பாக மறுக்கிறது. இது ஒரு மனித கொலை. எனவே குழந்தை எந்த நிலையில் இருந்தாலும் அதை அன்போடு பாதுகாத்து வளர்க்க வேண்டிய மனநிலையை சமூகம் உருவாக்க வேண்டும் என்பது திருச்சபையின் கருத்து.

## 6. வாடகைத் தாய்

ஒரு பெண் தன் கணவரோடு உறவுகொண்டாலும் குழந்தையை தனது வயிற்றில் தாங்க முடியாத நிலையில் அல்லது வேறு காரணங்களுக்காக இன்னொரு பெண்ணை வாடகைக்கு அமர்த்துவார். இப்பெண்ணை வாடகைத் தாய் என்பர். ஒரு ஒப்பந்தத்தின் கீழ் தமது குழந்தையைச் சுமந்து, பெற்றெடுத்து குழந்தை பிறந்தவுடன் அதை ஒப்பந்தக்காரரிடம் கொடுக்க வேண்டியது இந்த வாடகைத் தாயின் பொறுப்பு. இதை இன்று சமூகமும் அரசும் அங்கீகரிக்கின்றது. ஆனால் இந்த முறையைத் திருச்சபை பல சரியான காரணங்களுக்காக மறுக்கின்றது.

## 7. தனிமனித உரிமை

இன்று உலகம் தனிமனித உரிமைக்கு அதிக முன்னுரிமை கொடுத்து வருகின்றது. அடுத்தவரை பாதிக்காதவரை ஒருவர் எதையும் செய்ய உரிமை உண்டு எனும் சிந்தனையை உலக சமூகம் ஆதரிக்கின்றது. பெற்றோர் தம் பிள்ளைகளை குறிப்பிட்ட எல்லைக்குமேல் கண்டிக்க முடியாது. சுய இன்பம் தரும் பாலியல் செயல்கள், கூடி வாழுதல், விபசாரம், ஓரினச் சேர்க்கை-திருமணம், பால் மாற்றம், வயிற்றில் வளரும் சிசுவை கலைக்க தாய்க்குள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை, ஓரினத் திருமணமானாலும் தத்தெடுக்கும் உரிமை போன்ற நிலைகள் ஒருவருக்கு எல்லையற்ற சுதந்திரத்தைக் கொடுக்க அவர் அடுத்தவரையோ, தன் செயல்களின் விளைவுகளையோ யோசிக்காமல் சுயநலத்தோடு செயல்பட இது வாய்ப்பாகின்றது. இதனால் இளம் வயதில் திருமணத்திற்கு முன்பாக கருத்தரித்தல், கருச்சிதைவு, எயிட்ஸ் போன்ற பாலியல் தொடர்புள்ள தீராத நோய்கள் போன்ற சிக்கல்களை நாம் எதிர்கொள்ள வேண்டிவரும்.

திருச்சபையோ சில சட்டங்கள், புரிதல்கள், எதிர்விளைவுகளைக் கருத்திற்கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது.

இதன் பின்னணியில் பாலியற் கல்வி பற்றிய திருச்சபை, சமூகம், அரசியலின் நிலைப்பாடுகளைப் பார்ப்போம்.

## திருச்சபையின் கருத்து

திருச்சபை விவிலியத்தை மையமாகக் கொண்டு பால்தன்மை, பாலியல் நடத்தைகள், திருமணம், திருமண உறவு, இனப்பெருக்கம், குடும்பம், குடும்பக் கட்டுப்பாடு, பொறுப்புள்ள பெற்றோர் போன்ற விடயங்களைத் தெளிவாகக் கற்பிக்கின்றது. இதில் சில முக்கிய உண்மைகளை நாம் பார்க்கிறோம்.

1. நாம் ஆன்மீக மனிதர்கள்

கடவுள் நம்மை அவரது உருவிலும் சாயலிலும் படைத்தார் (தொநூ 1: 26-27). எமது மனித மாண்பு இந்த உண்மையிலிருந்தே வருகின்றது. இது எமக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இது நாம் புரிந்துகொள்ள வேண்டிய மாபெரும் உண்மை.

2. நாம் சமூக மனிதர்கள்.

மனிதராகப் படைக்கப்பட்ட நாம் சமூகத்தை உருவாக்க அழைக்கப்படுகின்றோம் (தொநூ 2: 18-25). குடும்பம், சமூகம் என்று இந்த உறவு வளர்கிறது. ஆழமான மகிழ்ச்சி இந்த உறவில்தான் தங்கியுள்ளது.

3. மனிதனுக்கு இந்த மாண்பு உண்டு என்பதால் அவன் எந்த நிலையிலும் மதிக்கப்பட வேண்டும். கருவாக உருவானது முதல் இயற்கை மரணம்வரை மனித உயிர் புனிதமானது. மனித உயிர் மதிக்கப்பட வேண்டும். இதனால் கருச்சிதைவையோ, இரக்கக் கொலையையோ எந்த சூழ்நிலையிலும் நியாயப்படுத்த முடியாது.

4. சரியானதை நாடுவதிலும் தீயதை தவிர்ப்பதிலும் உண்மை மகிழ்ச்சி உள்ளது.


5. பாலுறவு என்பது திருமண கட்டமைபினுள் ஆண்-பெண் ஒருமையிலும் (love-giving), இனப்பெருக்கத்திலும் (life-giving) அடங்கியுள்ளது.

இவ்வாறு கிறிஸ்தவத்தில் மனிதர் கடவுளால் அவரது உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டதால் தனிநபரோ, சமூகமோ, அரசோ திருமணம், குடும்பம், மனித உயிர், மனித மாண்பு போன்றவற்றை தமது விருப்பப்படி தீர்மானித்து செயல்படுத்த முடியாது என்பது திருச்சபையின் உறுதியான நிலைப்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின்னணியில்தான் திருமணம், திருமண உறவு, ஒருமை, பிரிக்கமுடியாத்தன்மை, குடும்ப கட்டுப்பாடு, பொறுப்புள்ள பெற்றோர், கருச்சிதைவு, குழந்தைகளின் எதிர்காலத்தைத் திட்டமிடல், குடும்பத்தில் முதியோர், நோயுற்றோர், மரணம், சமூகம் போன்ற பல விடயங்களை வளரும் சமூகம் அறிந்திருக்க வேண்டுமென்பதில் திருச்சபை உறுதியாக உள்ளது. எனவே பாலியற் கல்வி மிக அவசியம். ஆனால் யாரால் அது கொடுக்கப்பட வேண்டும்?



பாலியற் கல்வி அவசியம் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் ஏனைய ஒழுக்கம், நம்பிக்கை சார்ந்த விடயங்களைவிட பாலியற் கல்வி முன்னுரிமை பெறவில்லை. திருத்தந்தையர்களான 11ம் பத்திநாதர், 12ம் பத்திநாதர் சிந்தனையில் பாலியற் கல்வி என்பது பாலியல் பற்றிய வெளியரங்கமான தகவல்களைக் கொடுக்கும் ஒன்றாக இருக்கக்கூடாது. மாறாக, தன்னடக்கம், தூய்மை, கற்புடைமை, ஒழுக்க வாழ்வு, 6ம், 9ம் கட்டளைகள் போன்ற நற்பண்புகளைக் கொடுப்பதாக அமைய வேண்டும்.

## பெற்றோரின் பொறுப்பு

பாலியற் கல்வி என்பது பெற்றோரின் உரிமையும், கடமையுமாகும் என்று Familiaris Consortio எனும் மடலில் குறிப்பிடுகிறார் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர். இது குடும்ப சூழலில் அந்தரங்கமான முறையில் பிள்ளைகளுக்குப் புகட்டப்படல் வேண்டும்.

குடும்ப சூழலில் இளவயதினருக்கு மனித மாண்பு, கடமை, திருமண அன்பின் வெளிப்பாடுகள் பற்றி கற்றுக்கொடுக்க வேண்டும் என்று 'இன்றைய உலகில் திருச்சபை'' எனும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கொள்கைத் திரட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (இல. 49). அதேபோல இறைவனின் சக படைப்பாளிகளாக செயல்படும் பெற்றோர் குழந்தை பெற்றெடுப்பதை தமது உயரிய பணியாகவும் பிள்ளைகளுக்கு உரிய வழிகாட்டலைக் கொடுப்பதைக் கடமையாகவும் கருதவேண்டும் (இன்றைய உலகில் திருச்சபை இல 50). தம் குழந்தைகளுக்கு பெற்றோரே முதன்மையாக ஆசிரியர்கள். இவர்கள் முழுமையான கிறிஸ்தவ நெறியில் வாழ்ந்து வாழ்க்கைக் கல்வியை தம் பிள்ளைகளுக்கு ஊட்ட வேண்டும். இன்றைய உலகில் கருச்சிதைவு சர்வசாதாரணமாகி விட்ட நிலையில் மனித உயிரின், மனித மாண்பின் மகத்துவத்தை பெற்றோர் தம் பிள்ளைகளுக்குக் கற்பிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

'The Truth and Meaning of Human Sexuality'' எனும் ஆவணத்தின் மூலமாக குடும்ப வாழ்விற்கான நல்ல பல விடயங்களை திருச்சபை முன்வைக்கின்றது. இதில் பெற்றோரின் கடமை, பொறுப்பு, உரிமையை திருச்சபை வலியுறுத்துகின்றது.

தொடக்கத்திலிருந்தே பாடசாலைகளில் பாலியற் கல்வி கொடுக்கப்படுவதை திருத்தந்தையர்கள் வன்மையாகக் கண்டித்து வந்துள்ளனர். இதற்குக் காரணங்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இது பெற்றோரின் உரிமை, கடமை.

2. பாடசாலைகளில் பாலியற் கல்வி புகட்டப்படுவதற்கான நோக்கம் வேறு. HIV, AIDS போன்ற பாலுறவு சம்பந்தமான நோய்களைத் தடுக்கும் நோக்கத்தோடு பாதுகாப்பான பாலுறவு (safe sex) எனும் பெயரில் கருத்தரிப்பைத் தடுக்க மேற்கொள்ளப்படும் செயற்கை முறை கருத்தடைச் சாதனங்களை அறிமுகம் செய்வதிலும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளைச் சொல்லிக் கொடுப்பதிலுமே பாடசாலை பாலியற் கல்வி குறியாக உள்ளது. இது நன்மைக்குப் பதிலாக தீமையையே விளைவிக்கும். மாணவ மாணவிகள் தவறாக வழிநடத்தப்படலாம். ஏனெனில் திருமணம் எனும் கட்டமைப்பிற்குள் மட்டுமே பாலுறவு அமைய வேண்டும் என்பதை இது வலியுறுத்துவதில்லை. மாறாக, யாருடன் பாலுறவு கொண்டாலும் (திருமணத்திற்கு முன்பு அல்லது திருமணத்திற்குப் பின்பு வேறு ஒருவருடன்) இதனால் வரக்கூடிய HIV,AIDS போன்ற நோய்களிலிருந்து நீங்கள் உங்களைக் காத்துக்கொள்ள வேண்டும் எனும் சிந்தனையையே பாடசாலை மட்டத்தில் கொடுக்கப்படும் பாலியற் கல்வி வலியுறுத்துகின்றது.

அவ்வாறு பாடசாலை அல்லது நிறுவன மட்டத்தில் பாலியற் கல்வி கொடுக்கப் பட்டாலும் அவை தமது கண்காணிப்பில் உள்ளனவா என்பதை பெற்றோர் உறுதிசெய்து கொள்ள வேண்டும். திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் 1983ல் வெளியிட்ட 'குடும்ப உரிமை'எனும் ஆணவத்தில் தமது ஒழுக்கம், சமய விசுவாசத்திற்கு ஏற்றவாறு வகுப்புகள் அமையவில்லையானால் தம் பிள்ளைகள் அவற்றில் பங்கேற்பதை பெற்றோர் தவிர்க்கலாம்.

மேலும் மறைமாவட்ட மட்டத்தில் திருமண ஆயத்த வகுப்புகளுக்கு திருச்சபை முன்னுரிமை கொடுத்து அதிலே தேர்ச்சியும் அனுபவமும் பெற்ற வளவாளர்களை தேர்ந்தெடுத்து பயன்படுத்துகின்றது. அதேபோல விசேட கருத்தரங்குகள் மூலம் இளைஞர்களுக்கும், திருமண வயதில் இருக்கும் வளர்ந்தவர்களுக்கும் பாலியற் கல்வியை அவரவர் கிரகிக்கும் தன்மையை அறிந்து கொடுக்க வேண்டியது அவசியம்.

## சமூக மனநிலை

சமூகம் என்பது தனித்துவமான பண்பாடு கொண்ட மக்களையோ அல்லது சமய பின்னணிகள் கொண்ட மக்களையோ அல்லது பல்வேறுபட்ட இன, மத மக்களையோ அல்லது மக்கள் கூட்டத்தையோ குறிக்கும். இதில் சிந்தனைகள், மனநிலைகள், வாழ்வு முறைகள் வேறுபடலாம். நகர்ப்புறங்களில் பலர் வாழ்ந்தாலும் இவர்களுக்குள் எந்த உறவும் இருக்காது. கிராமங்களை எடுத்தால் அங்கு உட்கட்டமைப்பு வித்தியாசமாக இருக்கும்.

வாழ்வின் மாற்றத்திற்கேற்பவும், மனிதர்களின் மனநிலைக்கேற்பவும் இன்றைய சமூகமும் மாறுகின்றது. பண்டைய காலங்களில் சமூகம் சமயத்தோடு பின்னிப்பிணைந் திருந்தது. இன்று சில இடங்களில் இது நடைமுறையில் இருந்தாலும் பொதுவாக இந்த நிலை குறைந்துவிட்டது. சமய சட்டங்கள், எதிர்பார்ப்புகளின் பின்னணியில் சமூகமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்பட்டு வந்துள்ளது. ஆனால் இன்று தனி மனித சுதந்திரத்தைப் பயன்படுத்தி எப்படியும் வாழலாம் எனும் நிலை வந்துள்ளது. திருமணத்திற்கு முன்பாக பாலுறவு, கூடி வாழுதல், விபசாரம் என்று பல ஒழுக்கக் கேடுகள் நடைபெற்றாலும் அதைத் தட்டிக் கேட்க யாராலும் முடியாது. பல சந்தர்ப்பங்களில் அரசியல் கட்சிகளும் இதற்கு இசைந்து கொடுக்கின்றன.

இந்நிலையில் பாலியற் கல்வி வளரும் சமூகத்திற்கு மிக அவசியம். உடலில் ஏற்படும் பருவ மாற்றங்கள், உடலுறவு, முறையற்ற உறவுகளால் வரக்கூடிய விளைவுகள், திருமணம், குடும்பம் என்று பல விடயங்கள் இருந்தாலும் எந்த வயதில் பாலியற் கல்வி கற்பிக்கப்பட வேண்டும், எந்தெந்த விடயங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்பது தெளிவற்ற விடயமாகவே உள்ளது. யார் இதில் ஈடுபடுவது?

**குடும்ப சூழல்:** தமது பிள்ளைகளுக்கு உரிய காலத்தில் உரிய முறையில் இக்கல்வி யைக் கொடுக்க வேண்டியது பெற்றோரின் கடமை. ஏனெனில் தமது பிள்ளைகளின் மனநிலை, நண்பர்கள், சூழல் போன்றவற்றை பெற்றோர் நன்கு அறிந்து வைத்திருப்பார்கள்.

**கல்விச் சமூகம்:** பாடசாலைகளில் உரிய வகுப்பில், உரிய பாடத்திட்டத்தின் மூலமாக மாணவர்களுக்கு பாலியற் கல்வி கொடுக்கப்பட வேண்டும். ஆனால் அதற்கென பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் எமது கல்விக்கூடங்களில் இல்லை என்றே கூறலாம்.

## அரசியல் நிலைப்பாடு

இன்று எமது அரசியல் கட்சிகள் சமூகத்தின் வளர்ச்சி, ஒழுக்கம் நிறைந்த நாட்டு மக்கள் என்பதை இலக்காகக் கொண்டிராமல் தமது ஆட்சியில் இருக்கும் காலத்தில் சேர்க்கக் கூடியதை சேர்ப்பதிலும், எவ்விலை கொடுத்தாவது தமது ஆட்சியைத் தக்கவைப்பதிலுமே குறியாக இருக்கின்றன. ஒழுக்கம் அல்லது எந்த விடயமானாலும் சூழ்நிலை எல்லைமீறி பூதாகரமாக மாறும்போதே இவர்கள் செயல்படத் தொடங்குவார்கள். அல்லது மக்கள் இவர்களில் நம்பிக்கை இழந்துவிடுவார்கள் என்பதே இந்த செயல்பாட்டின் நோக்கமாகும். இந்நிலையில் அரசிடமிருந்து எதை நாம் எதிர்பார்க்கலாம்? உலக சமூகத்தை எடுத்துக்கொண்டால் சில நாடுகளில் கருச்சிதைவு, ஓரின சேர்க்கை, ஓரினத் திருமணம், விவாகரத்து, விபசாரம் போன்றவை சமூக சீர்கேடுகளாக இருந்தாலும் பெரும்பான்மையான மக்களின் விருப்பம் என்பதால் அவற்றை சட்டரீதியாக்கியுள்ளன. இங்கும் அரசியல் பின்னணியே காரணம். இன்று கருச்சிதைவு சட்டரீதியாக்கப்பட்ட நாடொன்றின் அரசு அதை நீக்கி கருச்சிதைவை தடைசெய்தால் அந்த அரசு நிலைக்காது.

எனவே இன்றைய உலக நாடுகளில் எது நல்லது, சரியானது, ஒழுக்கம் நிறைந்த வாழ்வுக்கு வழிவகுப்பது என்பது முன்னுரிமை பெறுவதில்லை.

## முடிவாக...

மறைந்த திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அமெரிக்காவிற்கு ஒருதடவை சென்ற சமயம் அங்கு தனதுரையில் கருச்சிதைவுக்கு எதிராகப் பேசினார். இதைக் கேட்ட சில பெண்ணியவாதிகள் அரங்கத்தைவிட்டு வெளியேறி தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இதுபோன்ற எதிர்ப்புகள் வரலாம் என திருத்தந்தை எதிர்பார்த்தாலும் அவர் துணிந்து கருச்சிதைவு தவறானது, அது மனிதக் கொலைக்கு சமமானது எனும் திருச்சபையின் நிலைப்பாட்டை வலியுறுத்தினார்.

தனிமனித சுதந்திரம், தனிமனித கருத்து போன்றன சமூகத்திலே முன்னுரிமை பெற்றாலும் எமது மக்கள் தவறான வழியில் செல்வதை நாம் தனித்தோ, சமூகமாகவோ, கிறிஸ்தவ விசுவாசிகளாகவோ பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எனது பிள்ளை தவறான வழியில் செல்வதை என்னால் தடுக்க முடியவில்லை என்று பெற்றோர் புலம்பித் தமது கடமையிலிருந்து விலகி நிற்க முடியாது. சமூகமும், பங்குச் சமூகமும் பெற்றோருக்குத் துணையாக செயல்பட முன்வர வேண்டும். காத்திரமாக உட்கட்டமைப்பு உருவாகும்போது எமது இளம் சமூகத்தை எல்லா வகையான சீரழிவுகளிலிருந்தும் காத்து ஒழுக்க நெறியில் வழிநடத்தலாம்.

இன்று திருச்சபைக்குப் பெரும் சவால் விடுக்கின்ற விடயம் இது. சமூக, அரசியல் கட்டமைப்புகளையும் கடந்து தனது கொள்கையில் உறுதியாக இருந்து ஒழுக்க நெறிகளை அனைத்து மக்களுக்கும் கொடுக்க வேண்டியது திருச்சபையின் கடமையாகும். இதற்கு நாம் தனித்த விசுவாசிகளாகவும், குடும்பமாகவும், பங்குத் திருச்சபையாகவும் எமது பங்களிப்பையும் ஆதரவையும் கொடுக்க வேண்டும்.

பங்கு மட்டத்தில் திருமண ஆயத்த வகுப்புகள் நடைபெறுவதுபோல இளைஞர்களுக்கான சிறப்பான உரைகள், கருத்தரங்குகள், விழிப்புணர்வு தரக்கூடிய ஒன்றுகூடல்கள், செயலமர்வுகள் போன்றன காலத்துக்குக் காலம் நடாத்தப்பட வேண்டும். சரியான வழிகாட்டல் கொடுக்கப்பட வேண்டும். தற்புலனடக்கம், தூய்மை, கற்பு, தன்னடக்கம், பணிவு போன்ற நற்பண்புகளில் எம் இளம் சமூகம் வழிநடத்தப்பட வேண்டும். சமூகமும் அரசும் முன்வைக்கும் சவால்களையும் எதிர்கொண்டு ஒழுக்கம் நிறைந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப ஒன்றுபடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழி சொல்லிகளும் வகை மாதிரிகளும்

அருட்பணி. M.V.E. ரவிச்சந்திரன்

இளைஞர் ஒருவரோடு உரையாடிக்கொண்டிருந்த போது அவர் தனக்கு நிகழ்ந்த சம்பவம் ஒன்றைக்குறிப்பிட்டார். "அண்மையில் வவுனியாவில் ஒரு கடையில் சில பொருட்களை வாங்கிய பின்பு அங்கும் இங்கும் பராக்குப் பார்த்தபடியே பணத்தை எடுத்து நீட்டினேன். அப்பொழுது கடை உரிமையாளர் என்னைப் "பார்த்து தம்பி காசை வலது கையால் தாரும். அதுதான் எங்கட பண்பாடு இண்டைக்கு எல்லாமே தலைகீழாகப் போகுது. எங்கட பிள்ளைகளுக்கு எங்கட பண்பாடே தெரியாமல் போகுது" என்று கூறினார். அப்பொழுதுதான் நான் இடது கையால் காசைக்கொடுத்ததை உணர்ந்து திருத்திக் கொண்டேன். இவ்வாறு கூறிய அந்த இளைஞர் அந்த பெரியவர் சொற்கள் தன்னை மிகவும் பாதித்தது என்று என்னோடு பகிர்ந்து கொண்ட நிகழ்வு பல சிந்தனைகளை என்னுள் தூண்டியது.

## பெரியோரின் ஆதங்கம்

இன்று பெற்றோர்கள், பெரியோர்கள், சமய, சமூக, அரசியல் தலைவர்கள் எல்லோருடைய கருத்திலும் இடம் பிடித்திருக்கும் ஒரு விடயம், இளையோரின் சீரழிவுப் போக்கு. ஊடகங்களும் தங்கள் கடமைக்கு இதைப்பற்றிய கருத்துக்களையும் கட்டுரைகளையும் போட்டு இடத்தை நிரப்புகின்றன. எங்கே தங்கள் குட்டுக்கள் அம்பலமாகி விடுமோ என்ற அவசரத்தில் இளையோரின் மீது சுண்டுவிரலை நீட்டுகிறார்களோ என்று சந்தேகிக்கும் அளவிற்கு இவர்களது குற்றச்சாட்டுக்களும் ஆதங்கங்களும் எல்லை மீறிச் செல்கின்றன.

சிறிய விடயங்களை பெரிதாக்குவதும் உதிரி விடயங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதும் எமது சமூகத்தின் ஒரு குணக்குறியே ஆயினும் அவர்களுடைய ஆதங்கத்திற்கு அடிப்படை இல்லை என்றும் கூறிவிட முடியாது. 2009 மே மாதத்திற்கு பின்பு ஏற்பட்டு வருகின்ற புதிய சூழ்நிலைக்கு எமது சமூகம் முகம் கொடுக்க மிகவும் கடினப்படுகின்றது. அதற்கு முந்திய முப்பதாண்டு கால நிகழ்வுப்போக்குகளின் ஏற்பட்ட ஓர் திடீர் முறிவு இதுவரை பரிச்சயமில்லாத ஒரு புதிய போக்கின் ஆரம்பம் என்பன எமது இளையோரை ஒரு குழப்ப நிலையில் ஆழ்த்தி விட்டதோடல்லாமல் பெரியோரையும் பாரம்பரிய அணுகுமுறைகள் நீர்த்துபோனநிலையில் என்ன செய்வது, என்பது தொடர்பாக கையறு நிலைக்குத் தள்ளியுள்ளது. இந்நிலையில் குறைகூறல்களுக்கும், புலம்பல்களுக்கும் அப்பால் சூழலை புரிந்து கொள்ளல் தொடர்பாகவும் சில திசைதேடல்கள் தொடர்பாகவுமான ஒரு குறிப்பாக இக்கட்டுரை அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய சூழலைப் புரிதல்

போர்க்காலம் எப்படி இளைஞர்கள் மீது தனது நேரடிப் பாதிப்பை செலுத்தியதோ அதைவிட அதிகமாகவே போரின் பின்னான காலம் இளைஞர் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது. போர்க்காலத்தில் இளையோர்கள் ஒரு இனத்துக்கான போர்ச்சுமையை தமது தோள்களிலே நேரடியாகச் சுமக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அதனால் அவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு, வளமான வாழ்வு, என்பவற்றைத் துறந்து போராடவேண்டியவர்களாக மாற்றப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானோர் தமது இன்னுயிரையே தியாகம் செய்தார்கள். இன்னும் பலர் போரின் வடுக்களை இன்றும் தமது உள்ளங்களிலும் உடல்களிலும் சுமந்தவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள்.

போரின் பின்னான காலம் வித்தியாசமானது. அது போரின் சுமைகளை அவர்கள் மேலேற்றிவிட்டது. ஆனால் நளினமானதும் நவீனமானதுமான பல சுமைகள் நாசூக்காக அவர்கள் மீது ஏற்றிவிடபட்டிருக்கிறது. போரின் காலத்தில் பல்வேறு காரணங்களால் இவற்றை அறிந்திருக்காத எமது இளைய தலைமுறை இன்று தள்ளாடுகிறது. இவற்றை இங்கு பட்டியல் இட்டுப்பார்க்கலாம்.

### 1. miss call கலாச்சாரம்

இன்றைய இளையோரின் இணைபிரியாத் துணையாக இடம் பிடித்து வலம் வருவது கைத்தொலைபேசி. எப்பொழுதுமே கைத்தொலைபேசிகளை நோண்டிக்கொண்டிருப்பது இன்று சாதாரணமாகக் காணக்கூடிய ஒரு விடயம். எனது வழிகாட்டலில் இயங்கும் பொதுநிலையினர் கழகத்தினர் கூட்டங்களுக்கு கடிதங்களை அனுப்பி வைப்பார்கள். ஆனால் இளையோர் கழகத்தினர் SMS களை அனுப்புவார்கள் அல்லது கைப்பேசி மூலம் அழைப்பு விடுவார்கள். ஆக இளையோரிடம் பெருகியுள்ள கைத்தொலைபேசி பாவனை அவற்றின் உயர் பயன்பாட்டிற்கு அப்பால் பல தொல்லைகளை அவர்களுக்கு உருவாக்கி வருகிறதை அறிய முடிகிறது. இளம் பெண்களினூடான ஒன்று கூடல் ஒன்றில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை பட்டியலிட்டு அவற்றை ஆய்வுக்காக முன்னுரிமைப்படுத்த பணித்தபோது அவர்கள் தேர்ந்தெடுத்த விடயம் கைத்தொலைபேசிப் பாவனை. தமது கைத்தொலைபேசிகளே தமக்குப் பெரும் சிக்கலாவதை அவர்கள் உணர்ந்தே உள்ளார்கள். Miss call தொல்லைகள் இன்றைய இளையோரின் மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும்.

### 2. இணையப் பாவனை

இணையம் வழியாக உலகம் வீடுகளுக்குள் வந்த காலம் மலையேறி இப்போது இணையம் வழி உலகம் இளையோரின் விரல் நுனிகளில் நடமாடும் காலம் வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன கைபேசிகளின் வருகை உலகைக் கையில் காவிச் செல்லவும் ஒரு விரலின் மெல்லிய வருடல் மூலம் இணையத்தை உள்ளங்கைகளில் திறக்கவும் வசதி செய்து கொடுக்கிறது, காணக்கூடாது என்று எமது பண்பாடு விலக்கும் விடயங்களைக் காண்பதும் கேட்கக்கூடாது என்று உலகம் ஒதுக்கும் விடயங்களைக் கேட்பதும் இன்று இளையோர்களுக் சர்வசாதாரணமாகி விட்டது. அண்மையில் இளையோர் மன்றக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட இளையோர்கள் தம் அனைவரிடமும் " முகப்புத்தகப் பாவனை இருப்பதனால் கூட்ட அறிவித்தலை முகப்புத்தகத்தில் போட்டு விடுங்கள் போதும் நாங்கள் பார்ப்போம் என்று கூறினர். Chat, இலே Cheat செய்வது இன்று ஒரு சாதாரண விடயம் ஏமாறுபவர்கள் பாடு அதோ கதிதான்.

## 3. குடி மற்றும் போதைப்பொருள் பாவனை

இளையோருக்கு போதையேற்றும் பொருட்கள் பல்வேறு வடிவங்களில் இன்று நடமாடுகின்றன. பெரும்பாலும் குடிவகைகளைப் பற்றித்தான் பெற்றோர் விழிப்பாய் இருப்பார்கள் ஆனால் பலவகைப்பாக்குகள், வெற்றிலைகள், மற்றும் இனிப்புகள் வடிவில் பல விதமான போதையேற்றும் பொருட்களின் பாவனை எமது இளையோரிடத்து மலிந்து காணப்படுகின்றது. இவை போதாதென்று இப்போது ஹெரோயின் போன்ற அதி ஆபத்தான போதைப் பொருள் பாவனை இளையோரிடமும் குறிப்பாக மாணவர்களிடமும் காணப்படுகின்றது என்ற விடயம் வெளியாகியிருக்கிறது.

## 4. விழுமியச் சீர்குலைவு

வரையறுக்கப்பட்ட இலக்குகளோடு போராடி வந்த ஒரு சமூகம் திடீர் தோல்வி ஒன்றைச் சந்திக்கும் போது குழப்பங்கள் ஏற்படுகின்றன. அவநம்பிக்கையும் தோல்வி மனப்பான்மையும் நுழைகிறபோது வாழ்க்கைக்காக அதுவரை வரையறுக்கப்பட்ட ஒழுங்குகள் மது வினாக்கள் எழுகின்றன. ஏனைய நாடுகள் பண்பாடுகளின் சமகால நடத்தைப் போக்குகள் தொடர்பாடல்கள் ஊடாகவும், இணையம் வழியாகவும் வந்து குவிகின்றன. இதனால் எமது பண்பாட்டு விழுமியங்களைப் பேண வேண்டும் என்ற எண்ணம் அற்றுப் போகின்றது. இப்படித்தான் வாழ வேண்டும் என்ற ஒழுங்குமுறையில் கேள்விகள் எழுகின்றன. எப்படியும் வாழலாம் என்கின்ற போக்குகள் தலை தூக்குகின்றன. எதையும் அனுபவித்துப்பார்க்க வாய்ப்புக் கிடைக்கும் சூழலில் எல்லாவற்றையும் அனுபவிக்க எண்ணம் தோன்றுகிறது. இந்த, போக்கு பாரம்பரிய விழுமியங்களை சீர்குலைத்து விடுகிறது. இச்சீர்குலையும் சமகாலம் திறந்து விடும் பல்வேறு நவீன வாய்ப்புகளும் சந்திக்கும்போது, சமூகச் சீரழிவுதான் பெருகிவிடுகின்றது. "விபசாரம் ஒரு தொழில் தானே" "வயது வந்த காதலர்கள் ரூம் போட்டுத் தங்கினால் என்ன பிழை" போன்ற வினாக்கள் யதார்த்தமாகவே எழுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பாரம்பரிய ஒழுங்குபேணு முறைகளின் போதாமை

பாரம்பரியமாக நாம் எமது பிள்ளைகள் மீது ஏற்படுத்தியிருந்த கட்டுப்பாட்டு ஒழுங்குகள் இன்று சீர்குலைந்து வருகின்றன. இதற்கு முக்கிய காரணம் எமது பாரம்பரிய ஒழுக்கம் பேணும் முறைகள் இன்று தடுக்கப்படுவது அல்லது நிராகரிக்கப்படுவதாகும். தண்டனை மற்றும் சமூக அழுத்தத்தின் மூலமான ஒரு புறவயமாக ஒழுக்கமுறையே எம்மத்தியில் நிலைநாட்டப்பட்டு வந்தது. ஆனால் இன்று அந்த ஒழுக்கம் பேணும் முறைகள் தீர்ந்து விட்டன. தண்டனை சட்டரீதியாகவே தடை என்றாகி விட்டது. இதனால் சமூக அழுத்தத்தைப்பற்றி கவலைபட இளையோர் தயாரில்லை. இந்நிலையில் அகலயமான ஒழுக்க முறையே பயனுள்ளதாகும். இளையோர் சுயகட்டுப்பாடுள்ளவர்களாக வளர்வதே இதற்குகந்த வழியாகும். ஆயினும் சுயஒழுக்கத்தில் அவர்களை வளரச் செய்யும் வழிமுறைகள் எமது பெற்றோர் பெரியோர் ஆசான்களுக்கு போதியளவு கைவராததவையாக இருக்கின்றன. இந்நிலையில் குழப்பநிலை என்பது சமூகத்தின் தவிர்க்க முடியாத யதார்த்தமாகி விட்டது.

## இளையோர் எழுப்பும் வினா

மேற்சொன்ன சூழலில் இருந்து கொண்டு இளையோர் எழுப்பும் வினா ஒன்று உண்டு. அதனைக் கேட்க செவியுள்ளவர்கள் தான் புரிந்து கொள்கின்றார்கள். உண்மையில் நடத்தை மாற்றங்களுக்கு உள்ளாகி, சீரழிந்து கொண்டும் தெருவோரங்களிலும், மதுக்கடை வாசல்களிலும், நின்று கொண்டும் பெண்கள் பின்னாக அலைந்து வெடி கொழுத்தி, கல்லெறிந்து, கைகலப்புக்களில் ஈடுபட்டும், புயல் வேகத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி தமக்கும் மற்றவர்களுக்கும் ஆபத்தை வருவித்துக் கொண்டும் இவர்கள் எழுப்பும் கேள்வி ஒன்றுதான். அல்லது இவற்றையெல்லாம் செய்வதன் மூலம் அவர்கள் சமூகத்தின் கவனத்தை ஈர்த்து எழுப்பும் கேள்வி ஒன்று தான். காலங்காலமாக தமது நிலை புரியாது குழப்பங்களுக்கும், பிரச்சனைகளுக்கும், மத்தியில் சிக்கி, எங்கு போவது, என்ன செய்வது என்று வழிதெரியாமல் தவிர்க்கும் ஒவ்வொருவரும் எழுப்பும் வினா அதே தான். அந்த வினா அன்று இயேசுவிடமும் எழுப்பப்பட்டது. "நிலைவாழ்வு பெற நான் என்ன செய்ய வேண்டும்?"

## நிலைவாழ்வு பெற நான் என்ன செய்ய வேண்டும்?

என்ற வினாவுடன் அன்று இயேசுவை அணுகிய இளைஞன் அல்லது செல்வந்தன் உண்மையில் குழப்பத்திலும், தேடலிலும், உழலும் எல்லா மனிதர்களின் பிரதிநிதியுமாகவே எனக்குத் தெரிகின்றான். பரிசேயராக, வரிதண்டுவோராக, நோயுற்றோராக, விபச்சாரிகளாக, பாவிகளாக வாழ்வின் எல்லா வித நிலைகளிலும், உழலும் சாதாரண மனிதர்களின் உள்ளத்து வினாவையே அவன் வெளிப்படுத்துகின்றான். சிலர் தெளிவடைந்து அந்த வினாவை எழுப்புகின்றார்கள். ஏனையோர் வெளிப்படையாக வினாவுமளவுற்கு தெளிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறாவிட்டாலும் அவர்களது வாழ்வின் இருப்பு அத்தகைய வினாவையே எழுப்பி விடுகிறது. இயேசு அவனுக்கு பதிலளித்ததன் மூலம் அவர்கள் அனைவருக்குமே பதிலளிக்கிறார். முதலில் இயேசு அவனைப்பார்த்து சாதாரண மானிட வாழ்வின் ஒழுங்குகளைப் பின்பற்றுமாறு கேட்கிறார். சட்டங்களைக் கடைப்பிடிப்பது என்பது அடிப்படையில் வாழ்வுக்கான ஒழுங்கேயாகும். அவன் அவற்றைக் கடைப்பிடிப்பதாகக் கூறியதும் இயேசு அவனுக்கு அதற்கடுத்த ஆழமான உண்மையான ஆனால் இடுக்கமான வழியைக் காட்டுகிறார்.

## என்னைப் பின்செல்

அவன் விண்ணரசிற்கு வெகு தொலைவில் இல்லை என்பதை அறிந்த இயேசு அனைத்தையும் விற்று ஏழைகளுக்கு கொடுத்து விட்டு பின்பு வந்து தன்னைப் பின் செல்லுமாறு கூறுகிறார். ஒரு ஆதாரமாக அழைப்பு சவால்கள் நிறைந்த அழைப்பு. அவ்வாலிபன் அல்லது செல்வந்தன் அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை ஏனெனில் அவனிடம் மிகுந்த செல்வம் இருந்தது. அவன் முகவாட்டத்தோடு சென்றான். என்று புதிய ஏற்பாடு கூறுகின்றது. இயேசுவின் இந்த அழைப்பு இலகுவானதல்ல சவால் மிகுந்தது. அதனால் பலர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் தான். அதனால் தான் இயேசு இறையரசுக்குச் செல்லும் வழி இடுக்கமானது என்று கூறினார். பலர் இயேசுவைப் பின் செல்லாது விட்டனர் சிலர் தான் இயேசுவைப் பின்சென்றனர். ஆனால் இங்குள்ள வினா என்னவென்றால் அன்று இயேசு அந்த இளைஞனைப் பார்த்து என்னைப் பின்செல் நீ முடிவில்லா வாழ்வைக் கண்டடைய முடியும் என்று உறுதியோடு உரைத்து வழிகாட்டியது போல இன்று துணிந்து சொல்லவும், வழிகாட்டவும், எத்தனை பெரியோர், பெற்றோர், மதத்தலைவர்கள், சமூகத்தலைவர்கள் தயாராக இருக்கின்றனர். இதன் மறுதலையாக இன்றைய இளையோர் பார்த்துப் பின் பற்றக் கூடியவர்களாக எத்தனை பெரியோர் வாழ்ந்து வருகின்றனர். என்னைப் பின்செல் என உறுதியோடு சொல்லும் தகுதி எத்தனை பேருக்கு இருக்கிறது?

## வழி சொல்லிகளும் வகை மாதிரிகளும்

இன்றைய உலகம் வழி சொல்லிகளினால் நிறைந்துள்ளது. போதனைகள், கருத்துக்கள், காற்றெங்கும் பரவி வழிமண்டலத்தை மாசு படுத்துபவையாக நீக்கமற நிறைந்துள்ளன. இந்நிலையில் இன்றைய தலைமுறை வகை மாதிரிகைகளைத் தேடுகின்றது. "நான் எல்லாவற்றையும் அனுபவித்து எழுத்து வந்தவன் ஆகவே நான் சொல்லுகின்றேன் கேளுங்கள்." என்ற கண்ணதாசன் வகையாளர்களை இன்றைய இளையோர் கருத்திலெடுக்கத் தயாரில்லை. வார்த்தையொன்று வாழ்வொன்றாக வாழும் வெளிவேடக்காரர்களையும் அவர்கள் நிராகரித்து வருகிறார்கள். மாறாக வாழ்ந்து அனுபவித்ததை ஒருவன் சொல்லும் போது தான் அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள்.

ஒருமுறை மகாத்மா காந்தியிடம் தனது பிள்ளையையும் அழைத்துக் கொண்டு ஒருவர் சென்றார். "என் பிள்ளை அதிகம் இனிப்புப் பண்டம் உண்கிறான் சொன்னால் கேட்கின்றான் இல்லை. நீங்கள் புத்தி சொன்னாலாவது கேட்பானா எனப் பார்க்க அழைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தேன்" என்றார். அவர்கள் இருவரையும் பார்த்து "இன்று சென்று விட்டு ஒருவாரம் கழித்து வாருங்கள் " என்றார் மகாத்மா. தாய்க்கு ஒன்றும் புரியவில்லை ஆயினும் சென்று விட்டனர். ஒரு வாரம் கழித்து மீண்டும் பிள்ளையோடு காந்தியிடம் வந்தார். பிள்ளையை அன்போடு அழைத்து புத்திமதி கூறத் தொடங்கினார் காந்தி. அவர் பேசி முடித்த பின்பு தாய் காந்தியை நோக்கி " இந்த வார்த்தைகளை அன்றே கூறியிருக்கலாமே ஏன் ஒரு வாரம் கழித்து வரச் சொன்னீர்கள். என்று கேட்டார். அதற்கு புன்சிரிப்போடு காந்தித்தாத்தா கூறினார். " அவனை இனிப்புப் பண்டம் தின்பதை நிறுத்தச் சொல்வதற்கு முன்பு என்னால் அது முடியுமா என்று பார்க்க வேண்டாமா? இந்த வாரம் முழுவதும் நான் இனிப்பு உண்ணவில்லை அதனால் இப்போது அவனுக்கு அறிவுரை கூறும் தகுதி எனக்கு வந்திருக்கிறது"

கையில் சிகரெட்டை ஏந்தியபடி மகனைப் புகைக்க கூடாது என்று கூறும் தந்தையர்களும், தன்னைத் தொடர் நாடகங்களுக்குள் தொலைத்து விட்டு தனது பிள்ளை சினிமா பார்ப்பதைத் தடுக்கும் தாய்மார்களும் தான் இன்று அநேகம். ஆசான்கள், துறவிகள், குருக்களும் இத்தகைய முரண் வாழ்க்கைக்கு விதிவிலக்கல்ல. இந்நிலையில் பிள்ளைகளின் நடத்தை மாற்றத்தை எப்படி எதிர்பார்ப்பது? பெற்றோர் பெரியோரில் தங்கி வாழும் நாள் வரைக்கும் அவர்கள் சொல்வதைக் கேட்கும் இவர்கள் அந்தப் பருவம் கடந்ததுமே பெற்றோர் செய்வதையே இரண்டு மடங்காகச் செய்யத் தொடங்கி விடுவார்கள் " தந்தை எட்டடி பாய்ந்தால் பிள்ளை பதினாறு அடிபாயும்" என்பது அனுபவ வாக்கல்லவா?

ஆகவே இன்று இளையோரை வழிப்படுத்தத் தேவையாக இருப்பது வழி சொல்லிகளல்ல வகை மாதிரிகைகளே. தந்தையின் பொறுப்புணர்வை, தாயின் அரவணைப்பை, பெற்றோரின் சமூக ஈடுபாட்டை, பிறரன்பு மனப்பாங்கை பார்த்துக் கேட்டு அனுபவிக்கும் ஒரு பிள்ளை வழிதவறிச் செல்வதற்கான சாத்தியப்பாடுகள் மிக மிக அரிதாகவே இருக்கும். குடும்பத்தில் சண்டை, சச்சரவும் பிணக்கும், பொறுப்பற்ற வாழ்வும், ஊதாரித்தனமான செலவும், பொழுது போக்கும், தலைவிரித்தாடும் போது பிள்ளைகள் மிக இலகுவில் இப்பொறியில் விழுந்து விடுகின்றனர். எனவே தம்மை 'நல்ல' பெற்றோராக 'நல்ல' ஆசிரியர்களாக, 'நல்ல' குருக்களாக வழிகாட்டிகள் வடிவமைத்துக் கொள்ளும் போது இளையோருக்கு 'நல்ல' வகை மாதிரிகள் கிடைக்கிறார்கள்.

நல்ல வகைமாதிரிகளைப் பின்பற்றி நல்ல இளைஞர்கள் உருவாகுவார்கள். இயேசு என்னைப் பின்செல் எனத் திடமாகக் கூறியது போல "என்னைப் பின்செல்" என்று துணிந்து கூறக் கூடிய உயர்ந்த ஆளுமைகளாக பெரியவர்களின் ஆளுமை மலர வேண்டும். கூட்டங்களுக்கும், திட்டங்களுக்கும், நிகழ்வுகளுக்கும் அப்பால் வகைமாதிரியான வாழ்வு முக்கியமானது. தலைவர்கள் இதனை மனங் கொள்வோமாக.

நான் என்ன செய்ய வேண்டும் என்று எமது இளைய தலைமுறை எழுப்பும் ஆத்மார்த்தமான கூக்குரலுக்கு "என்னை பின் செல்" என்று இயேசுவைப் போல ஒரு வரியில் சொல்லக் கூடிய தகைமை பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில நடைமுறைக் குறிப்புக்கள்.

- ❖ ஒரு போதும் பகிரங்கமாக அவர்களைக் கண்டிக்காதீர்கள்.
- ❖ சிறிய விடயங்களைப் பெரிது பண்ணாதீர்கள்.
- ❖ ஒருவரோடு இன்னுமொருவரை ஒப்பிட்டு பாராட்டாதீர்கள்.
- ❖ பிரித்தாளும் முயற்சியும் கட்சி கட்டுவதும் ஒருபோதும் கூடாது.
- ❖ அவர்கள் செய்யும் எந்த ஒரு சிறிய நல்ல விடயத்தையும் கண்டுகொள்ளாமல் விடாதீர்கள்.
- ❖ பிரச்சினைகளிலிருந்து தப்ப முயலாதீர்கள்.
- ❖ பாரபட்சம் காட்டாதீர்கள்.
- ❖ அவர்கள் செய்யும் நல்ல விடயங்களைத் தாராளமாகப் பாராட்டுங்கள்.
- ❖ அவர்களுடைய வெற்றிகளை சாதனைகளை பகிரங்கமாக மகிழ்வோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.
- ❖ தவறுகளை உடனடியாகவே மறந்து விடுங்கள் மன்னித்து விடுங்கள்.
- ❖ முரண்பாடு ஒன்றின் பின் ஒப்புரவாகுவதற்கு போதிய கால இடைவெளி கொடுங்கள்.
- ❖ அவர்களோடு கலந்துரையாடித் தீர்மானங்களை எடுங்கள்.
- ❖ உற்சாகமாகவும் புத்தாக்க மனநிலையிலும் இருங்கள்.
- ❖ நம்பிக்கையையும் நன் நோக்கையும் ஊட்டுங்கள்.
- ❖ அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஆர்வத்தோடு தேடுங்கள்.
- ❖ உறவை வளர்ப்பதில் ஆர்வமாக இருங்கள்.
- ❖ அவர்களுக்கு ஈடுபாடான விடயங்களில் நீங்களும் ஈடுபாடு காட்டுங்கள்.
- ❖ ஒழுக்கம், கொள்கை சம்பந்தமான விடயங்களில் உறுதியான நிலைப்பாடு எடுங்கள்.
- ❖ அவர்கள் மீது அளவுக்கதிகமான பொறுப்புக்களைச் சுமத்தாதீர்கள்.
- ❖ அவர்களது திறமைகளில் நம்பிக்கையை வெளிப்படுத்துங்கள்.
- ❖ அவர்கள் தமது விருப்பு வெறுப்புக்களை வெளிப்படுத்த இடமளியுங்கள்.
- ❖ உங்களது விருப்புக்களையும் இலக்குகளையும் தெளிவாக வெளிப்படுத்துங்கள்.
- ❖ பொறுமையைக் கற்றுக் கொள்ளுங்கள்.

Frnandez Joe, Basics in Youth Ministry, Kristhu Jothhi Publications, Bangalore, 1995

Vallabaraj Jerome, Animating the Youth, Kristhu Jothhi Publications, Bangalore, 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக இளைஞர் தின செய்தி - 2011
# மாட்ரீட், ஸ்பெயின்

WYD 2011
MADRID



world youth day MADRID 2011
Jornada Mundial de la Juventud


அருட்பணி. நெவின்ஸ் யோகராச்
இளைஞர் ஆணைக்குழு
மன்னார் மறைமாவட்டம்

1959 ஜனவரி 25ஆம் திகதி காலைப் பொழுது வத்திக்கானிலே பேதுருவானவர் சதுர்க்கத்திலே ஒரே சலசல்ப்பு, திரண்டிருந்த மக்களும், குருக்களும், ஆயர்களும் அப்போதைய திருத்தந்தை 23ம் அருளப்பர் அவர்கள் தன்னுடைய தள்ளாத வயதிலே புதியதொரு செய்தி ஒன்றை உலகிற்கு விடுக்கப்போகின்றார் என்ற கேள்விக்குறியோடு அங்கே இருந்த ஜன்னலை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள். ஜன்னலை திறந்து கொண்டு வெளிப்பட்ட திருத்தந்தை திருச்சபையின் ஜன்னல்களை திறந்துவிடுங்கள் சுத்தமான காற்று, இளமையான காற்று, புதிய காற்று உள்ளே நுழையட்டும் என்று 2ம் வத்திக்கான் சங்கத்தை கூட்டுவதற்கான அழைப்பை உலகிற்கு விடுத்தார். திருச்சபை தலைவர்கள், கருதினால்கள், விவிலிய பேரறிஞர்கள் எல்லாம் இது சாத்தியம் தானா? எதற்கு இந்த 2ம் வத்திக்கான் சங்கம் என்று பல எதிர்ப்புக்களை தெரிவித்தார்கள். ஆனால் அன்று கூட்டப்பட்ட இந்த 2ம் வத்திக்கான் சங்கமானதுதான் திருச்சபையின் வழிபாட்டிலும், திருச்சபையின் சட்ட திட்டங்களிலும், நடைமுறைகளிலும் பல்வேறு மாற்றத்தை கொண்டுவரவும் திருச்சபையில் பொதுநிலையினரதும், இளைஞர்களினதும் முக்கியத்துவத்தை முன்னுரிமைப்படுத்தி இன்றும் புதிய உத்வேகத்துடனும், எழுச்சியோடும், துணிவோடும், அன்பு, நீதி, சமாதானம், சமத்துவமாகிய இறையரசின் விழுமியங்களை இம் மண்ணில் விதைக்க இறையரசின் கனவை நனவாக்க, கட்டியெழுப்ப முனைப்போடு செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றது.

## இளமைப்பருவம்

இளமைப்பருவம் துடிப்புள்ள சுகமான, இனிமையான பருவம். கடமைகளையும் உடைமைகளையும் கணிக்கும் பருவம். இப்பருவமே எதிர்காலத்தின் நம்பிக்கை. இப்பருவத்தில் இள்ளஞர்கள் சந்திப்பவைகள், சார்ந்திருப்

JMJ 2011
MADRID





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவைகள் அவனை வெகுவாகப் பாதிக்கின்றன. இந்த நிலையிலே வாழ்வுக்கு ஆழ்ந்த பொருள் தரக்கூடிய ஆன்மீகம் தேவை. நாளைய சமுதாயம் வளமடைய இன்றைய இளைஞர் ஆன்மீகம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இளைஞர்கள் இல்லாத திருச் சபையை நினைத்துப்பார்க்க



முடியாது என்றார் எமது மறைந்த திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர். இளையோர் திருச்சபையின் நாளைய தூண்கள், இன்றைய நம்பிக்கை நட்சத்திரங்கள். எனவே நம்பிக்கை நட்சத்திரங்களான இளையவர் வாழ்வு ஒளி வீசும் வகையில் வாழப்படவேண்டும்.

இன்றைய நாகரீக உலகிலே தோன்றியுள்ள அறிவியலையும் தொடர்பு சாதனங்களையும் இறைத்தேடலில் இணைத்துக்கொள்ள வேண்டும். நானும் வளர்ந்து பிறரும் வாழ வழிவகுக்கும் ஒரு இலட்சியத்துடன் செயல்படும்போது மாற்றங்களை ஏற்படுத்த முடியும். இவ்வாறு தன் னோடும் பிறரோடும் இறையோடும் உரையாடலுக்கும் உறவாடலுக்கும் அழைத்துச்செல்லக் கூடியவிதமாக எமது கத்தோலிக்க இளைஞர்கள் உருவாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு சந்தர்ப்பமும் நல்ல வழிகாட்டலும் வழங்கப்படவேண்டும்.

## கிறிஸ்துவை மையப்படுத்திய வாழ்க்கை

அத்திவாரம் ஒரு கட்டடத்திற்கு எவ்வளவு அவசியமோ அதேபோல இளைஞர்களின் எதிர்காலம் சிறப்புற அமையவேண்டுமாயின் ஆழமான விசுவாசம் அவசியம். வேதாகமத் திலே இளைஞன் தாவீது பெரிய படையோடு எதிர்த்து வந்த கோலியாத்தை இறையருளால் வீழ்த்துகின்றான். யோசேப்பு என்னும் இளைஞன் தனக்கு சிறைவாசம் காத்திருக்கின்றது என்று தெரிந்தும் தீமைக்கு இடம் கொடாது அந்த சோதனையை வென்றதும் இறையருளால் தான். இது இறைவனோடு அவன் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையால்தான் என்பது சுட்டிக்காட்டப்படு கின்றது. சித்திரக்கலையில் நாம் எல்லோரும் காணும் பிரபல்யமான ஓவியம் மொனாலிசா. அந்த ஓவியத்தை மொசைக் சித்திரக் கலையம்சத்திற்கு ஏற்ப கண்ணாடித் துகள்களை பயன்படுத்தி வரைகின்றபோது அவற்றில் ஒரு துகள் விழுந்தாலும் அதன் பெறுமதி இழக்கப்படுவது போல இப்பிரபஞ்சத்தில் வாழும் ஒவ்வொரு இளைஞனும் பெறுமதியானவன். அவனது பங்களிப்பு இல்லாத இடம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெற்றிடமாகும். எனவே இளைஞர்களே நீங்கள் பெறுமதியானவர்கள். உங்கள் வாழ்வு கிறிஸ்துவை மையப்படுத்தியதாக இருக்கும் போது இறைவனின் அருட்துணை, வழிநடத்துதல், ஆசீர்வாதம் உங்களோடு எப்பொழுதும் இருக்கும் என்பதை நீங்கள் உணருவீர்கள். ஆகவே உங்கள் வாழ்வில் தோல்விகள், பிரச்சனைகள் வரும்போது நீங்கள் கலங்கத்தேவையில்லை, கதறத் தேவையில்லை ஏனென்றால் உங்கள் செயற்பாடும் விசுவாசமும் கிறிஸ்துவை மையப் படுத்தியதாக இருக்கின்றது.

## இளைஞர் கைகளில் உலகு

**"planted and built up in Jesus Christ, firm in the Faith" ( Col 2: 7)**

கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய பயணத்தில் வீறுநடை போட்டுக்கொண்டிருக்கும் எம் மன்னார் திருச்சபையானது இளைஞரின் பங்களிப்பும் பங்கேற்பும் திருச்சபைக்கு தேவை என்பதை உணர்ந்து, 1985ம் ஆண்டினை உலக கத்தோலிக்க இளைஞர் ஆண்டாக அறிவித்து 25 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் அதற்கு வெள்ளி விழாக்கொண்டாடும் முகமாகவும், மீண்டும் எங்கள் இளம் சந்ததியினரை வலுவூட்டும் முகமாகவும் மன்னார் திருச்சபையானது இவ்வாண்டை இளைஞர் ஆண்டாக அனுஸ்டித்து வருவது சாலப்பொருத்தமானதே. உலகத்தின் சாதனையாளர்கள் பட்டியலை நாம் பார்க்கின்றபோது அங்கே இளைஞர்கள்தான் உலகத்தை முன்னேற்றமான பாதைக்கு கொண்டுவந்திருப்பதை அவதானிக்கமுடிகின்றது. ஏன் இன்றும் இளைஞர்களின் பல்வேறுபட்ட செயற்பாடுகள், சாதனைகள் உலகில் பல மாற்றங்களுக்கு வித்திடுகின்றது. கொள்கையில்லா அரசியல், உழைப்பில்லா செல்வம், ஒழுக்கமில்லா கல்வி, மனிதமில்லா அறிவியல், தியாகமில்லா வழிபாடு, என்ற அநீத சமூகத்தின் தத்துவங் களைத் தகர்த்தெறிந்து மாற்றுச்சமூகத்தை உருவாக்கவேண்டும், புதிய கொள்கைகளை வடிவமைப்பது நீங்களாகத்தான் இருக்க வேண்டும். இன்று திருச்சபை விரும்புவது என்ன என்ற கேள்விக்கு, நம்பிக்கை கொண்ட இறை சமூகத்தை உருவாக்க புதிய தொழில் நுட்பங் களை பயன்படுத்தி முன்னேற வேண்டுமென்றும் அநீதிகளைச் விமர்சனத்துடன் சுட்டிக்காட்டிய இளைஞன் இயேசுவின் வழிநின்று செயற்பட திருச்சபை அழைக்கின்றது. 2011ம் ஆண்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் ஆண்டாக தடம்பதிக்கின்ற திருச்சபையில் இயேசு என்னும் இளைஞனின் இலட்சியக் கனவுகள் தனிமனித வாழ்விலும் சமூக வாழ்விலும் பிரதிபலிக்க வேண்டும்.

## உலக இளைஞர் தினம் - மாத்ரீட் 2011

திருச்சபையின் வரலாற்றிலே இளையோரின் திருத்தந்தை என்று பட்டம்பெற்ற, உலகிலேயே இளையோரினால் அதிகம் அன்புசெய்யப்பட்ட மறைந்த திருத்தந்தை 2ம் யோவான் பவுல் 1985ஆம் ஆண்டிலே முதல்முதலிலே உலக இளைஞர் தினத்தை ஆரம்பித்தார். இளையோரே நீங்கள் திருச்சபையின் வசந்த காலம், நீங்கள் நாளைய உலகின், திருச்சபையின் நம்பிக்கை நட்சத்திரங்கள் என்று பெருமையோடு அழைக்கின்ற இவர் இளைஞர் இல்லாத திருச்சபையை என்னால் கற்பனை செய்து பார்க்க முடியாது என்று இளைஞருக்கு புகழாரம் சூட்டுகின்றார். இன்று 25 ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டநிலையிலேயே உலக இளைஞர் தினத்தின் வெள்ளிவிழாவை உலகம் பூராகவும் வாழுகின்ற கத்தோலிக்க இளைஞர்கள் திருச்சபையோடு, திருச்சபை தலைமையோடு இணைந்து அண்மையிலே ஸ்பெயின் நாட்டிலே மாத்ரீட் என்கின்ற நகரத்தில் கொண்டாடினார்கள். ஏறத்தாழ 15 இலட்சத்திற்கும் அதிகமான இளைஞர்கள் யுவதிகள் ஒன்றுகூடிய அந்த நிகழ்விலே திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் அவர்கள் உரையாற்றுகின்ற பொழுது, உலகப் போக்கின்படி ஒழுகாமல் இயேசுவிலே ஊன்றப்பெற்று விசுவாசத்தில் உறுதியாவோம், கிறிஸ்துவின் சாட்சிகளாய் திகழ்வோம் என்று கத்தோலிக்க இளைஞர்களுக்கு அழைப்புவிடுத்தார். முதல் நாளிலே நடைபெற்ற சிலுவைப்பாதை தியானத்திலே இலட்சக்கணக்கான இளைஞர்களோடு சேர்ந்து சிலுவையை தூக்கிக் கொண்டு சென்ற அவர் இளைஞரே சிலுவையுடன் இயேசுவை பின்பற்றுங்கள், இயேசுவாக மாறுங்கள், 33 வயதில் சிலுவைச் சாவை ஏற்ற இளைஞன் இயேசுவே உங்களை முன்னுதாரணம். அவர் தம் இறையரசை கட்டியெழுப்பும் கருவிகளாக மாறுங்கள் என்று அறைகூவல் விடுத்தார்.

"கிறிஸ்துவில் வேரூன்றி அவரில் கட்டப்பட்டவர்களாக விசுவாசத்தில் உறுதியாக இருத்தல்" (கொலோ 2: 7)
என்ற மையப்பொருளோடு இந்த ஆண்டு நடைபெற்ற உலக இளைஞர் தினமானது உயிர்த்த, உயிருள்ள இயேசுவின் அனுபவமும் அவர் நம்மீது கொண்டுள்ள அன்பும் விசுவசிப்பவர்கள், விசுவாசத்தில் தளர்ச்சியுள்ளவர்கள், இன்னும் இயேசுவில் விசுவாசம் கொண்டிராதோருடன் பகிரப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. ஆழமான விருப்பங்களின் ஊற்றிலிருந்து

வாழ்க்கையில் பல்வேறுவகையான பாதுகாப்புக்களை அடைவதற்கான ஆர்வமிருப்பினும் அதைவிட பெரிதாக புதியதாக வாழ்க்கையை அதன் அழகோடும் சிறப்போடும் கண்டு அனுபவிக்கவேண்டும் என்கிற ஆர்வம் பெரிதாகும். எப்பொழுதும் வாழ்க்கையின் சாதாரண நிகழ்வுகளை விட அசாதாரண அனுபவங்களுக்கு மனம் ஆயத்தமாகிறது. இது ஒவ்வொரு தலைமுறையிலும் நிகழ்கிறது. மனிதர்கள் மேலானவற்றிற்காகவும் முடிவற்ற வாழ்விற்காகவும் உருவாக்கப்பெற்றவர்கள். எனவே நண்பர்களே இறைவனில் உங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்துங்கள். நீங்களே திருச்சபையின் சமூதாயத்தின் எதிர்காலம்.

## 2. கிறிஸ்துவில் வேரூன்றி கட்டி எழுப்புங்கள்

கொலோ 2:7 தூய பவுல் மூன்று காரியங்களை அழுத்தமாக கூறுகின்றார்.

1) கிறிஸ்துவில் வேரூன்றியவர்களாக இருத்தல்
2) கிறிஸ்துவில் கட்டியெழுப்பப்படுதல்
3) விசுவாசத்தில் உறுதியாக இருத்தல்

இதனை கிறிஸ்துவே நம் வாழ்வில் செயற்படுத்துகின்றார். இந்த கிறிஸ்தவ விசுவாசம் என்பது வெறும் நம்பிக்கை கொள்வது மட்டுமல்ல கிறிஸ்துவோடு நம் வாழ்நாள் முழுமைக்கும் ஆற்றலை வழங்கும் ஆள்தன்மையான உறவை வளர்த்தல். இயேசுவின் வார்த்தைகளுக்கு செவிமடுத்து அதன்படி நடப்பது, பாறைமீது கட்டிய வீட்டிற்கு ஒப்பாகும். லூக் 6: 47 - 48

## 3. விசுவாத்தில் உறுதியாக இருத்தல்

கடவுளுடைய உடனிருப்பை ஏற்று அவரை உண்மையில் வழிபட்டு அவரது குரலுக்கு செவிமடுப்பவர்கள் மனித மாண்பை மதித்து உறவை வளர்க்கும் அன்புச்சமூகத்தை அல்லது அன்பின் கலாச்சாரத்தை உருவாக்குகிறார்கள். மாறாக உலகப்போக்கிலான மதிப்பீடுகளால் ஈர்க்கப்படுபவர்கள் தன்னலம் சிதைந்த குடும்பங்கள் மனிதர்களுக்கும் நாடுகளுக்கும் வெறுப்பு போன்றவைகளால் இறைவன் இல்லாத ஒரு நரகத்தை உருவாக்குகிறார்கள். விண்ணகத்தின் முன் சுவை வாழ்வு கிறிஸ்துவின் பாடுகளில் நாம் ஒன்றிணைந்து பாவத்தின் அடிமைத்தளையிலிந்து விடுதலை பெறுவதாகும். இது பகைவர்களை மன்னிக்கும் ஆற்றலையும் ஏழைகளுடனான நம் சகோதரர்களுடன் பகிர்வையும் துன்பத்தில் உழல்வோர்க்கு உறுதுணையாக வாழும் பண்புகளை வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. காணாமலே இயேசுக்கிறிஸ்துவை விசுவசித்தல்

'அவர் கரங்களிலுள்ள ஆணிகளால் ஆன தழும்பை பார்க்காவிடில் அவரை விசுவசிக்கமாட்டேன்.'' என்று சொன்னவர் திருத்தூதரான தோமையார். நாமும் இயேசுவை பார்க்கவும் பேசவும் அவரின் பிரசன்னத்தை உணரவும் ஆசிக்கிறோம். அன்புக்குரிய இளைஞர்களே புனிதமிகு நற்கருணையில் இயேசுவைக் காணவும் சந்திக்கவும் கற்றுக்கொள்ளுங்கள். பச்சாத்தாபத்தின் வழியாக இயேசுவின் இரக்கத்தையும் மன்னிப்பையும் பெறுங்கள். ஏழைகள் கைவிடப்பட்டோர் நோயாளிகளை நம் சகோதர சகோதரிகளில் இயேசுவை கண்டு அவருக்கு ஊழியம் செய்யுங்கள். இறைவார்த்தை வழி இயேசுவோடு உரையாடுங்கள். செபத்தின் ஊடாக உங்கள் நம்பிக்கையில் உறுதியாய் இருங்கள்.

''இளைஞனே கிறிஸ்துவின் சாட்சியாய் விழித்தெழு'' என்று இளைஞன் இயேசுவின் அழைப்பின் குரல் கேட்டு அவர் பணிபுரிய முன்வருவோம். இளைஞர் ஆண்டு இந்த உலகில் பரந்துபட்ட திருச்சபையில் எம்மை யார் என்றும், எவ்வளவு பெறுமதியானவர்கள் என்றும் அடையாளம் காட்டுகின்றது.

இறுதியாக, இளைஞனே வேடிக்கை பார்த்துவிட்டு முகவரி இல்லாமலே மடிந்து போவதற்காக இறைவன் நம்மை படைக்கவில்லை. வெந்ததை தின்று விதிவந்தால் மாழ்வோம் என்று அவநம்பிக்கை கொண்டு வாழும் மானிடராகவும் இறைவன் நம்மை படைக்கவில்லை. மாறாக தன்னுடைய தொடர் படைப்பாற்றலால் உலகை புதுப்பித்து வரலாற்றின் முகங்களில் படிந்துள்ள அசிங்கங்களை துடைத்து மனித நேயம் மற்றும் இறைமைய வரலாறு உருவாகவும் இறைவன் நம்மை படைத்துள்ளார். நம்மையே நாம் மனிதர் என கண்டுகொண்டு நம்பிக்கை என்ற தளத்திலே நாம் கிறிஸ்தவர் என்று உணர்ந்து கொண்டு மனித நேயத்தோடும் கிறிஸ்தவ மதிப்பீடுகளோடும் வாழ்வதற்கும் இறைவன் தரும் வாய்ப்பையும், அழைப்பையும் ஏற்று அவர் வழிசெல்ல, கிறிஸ்துவின் சாட்சிகளாய் திகழ தொடர்ந்து செபிப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய டொன் பொஸ்கோ

## (ஜோண் பொஸ்கோ)

அருட்சகோ. துஷ்யந்தன்



தூய டொன் பொஸ்கோ அடிகளார் இறைவனால் இளைஞர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு கொடை. இயேசுவே அவருடைய வாழ்வு, மரியாளே அவருடைய துணை யாளர், இளைஞர் பணி அவருடைய தாகம், இரக்கமே அவருடைய கருவி.

### புனிதரின் ஆரம்ப வாழ்வு

இத்தாலி நாட்டின் வடபகுதியில் டூரின் நகருக்குப் பக்கதிலுள்ள பெச்சி என்னும் சிற்றூரில் 1815ம் ஆண்டு ஆவணி மாதம் 16ம் நாள் அவதரித்தார். தன்னுடைய 2வது வயதிலேயே தந்தையை இழந்த ஜோண், தாய் மாகிரெட்டின் அரவணைப்பில் வளர்ந்து வந்தார். படிப்பிலே மிக்க ஆர்வம் கொண்ட சிறுவன் ஜோணை, அவனுடைய தாயாரால் படிக்க வைக்க முடியவில்லை. ஏனெனில் அவர்களுடைய குடும்பம் ஏழ்மையில் வாடியது. அந்த ஊர்க் குருவானவரின் உதவியால் ஜோண் சிறிது காலம் கல்வி கற்க முடிந்தது. அக்குருவானவரின் இறப்பின் பின் தனது வாழ்வை நகர்த்த முடியாத ஜோண் தையல் கடையிலும் தச்சுப் பட்டறையிலும் வேலை செய்து வந்தார்.

### புனிதரின் அழைப்பு



தனது 9 வது வயதில் ஜோண் ஒரு கனவு கண்டார். அதிலே ஒளிமயமான ஒருவர் தனது தாயாருடன் அவருக்குத் தோன்றினார். அந்தத் தாயார் ஒரு புறத்திலே கட்டுக்கடங்காத வனவிலங்குகளான சிங்கம், புலி, யானை போன்றவற்றையும் மறுபுறத் திலே சாந்தமான செம்மறிகளையும் காட்டி அவரிடம் "இக் கொடிய விலங்குக்ளைப் போல் இருக்கிற மனிதர்களை, நீ இச்செம்மறிகளைப் போல் சாந்த முள்ளவர்களாக மாற்ற வேண்டும்." என்று கேட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். இதன் மூலம் கவனிப்பாரின்றி திரியும் சிறுவர்களை கவனிப்பதுதான் தனது வாழ்வின் பணி என்பதை உணர்ந்து கொண்டார். சிறுவர்களை ஒன்று கூட்டி, அவர்களுக்குச் சிறுசிறு கதைகளைச் சொல்வதும், வித்தைகளைக் காட்டுவதும் ஜோனுக்கு வழக்கமாயிருந்தது. பள்ளிப் படிப்பு முடிந்ததும் குருமடத்தில் இணைந்து தமது 26வது வயதில் (1841ல்) குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார்.

## புனிதரின் இளையோர் பணி

சிறுவர்களிடமும், இளைஞர்களிடமும் இயல்பாகவே நிறைந்துள்ள ஆற்றலுக்கு நல்ல வடிகால் அமைத்துக் கொடுத்தால், அவர்கள் தீய வழிகளில் செல்ல மாட்டார்கள் என்பது ஜோண் பொஸ்கோவின் உறுதியான நம்பிக்கை. இளைஞர் ஒன்று கூடி தங்கிப்படிக்கும் "ஆரட்டரி" (Oratory) எனப்படும் இல்லங்களை உருவாக்கினார். நாளுக்கு நாள் அங்கு கைவிடப்பட்ட இளம் சிறார்களின் எண்ணிக்கை அதிகரித்தது.



தவறு செய்யும் சிறுவர்களைத் தண்டனையால் அல்ல, அன்பால் திருத்த வேண்டும் என்பதுதான் ஜோண் பொஸ்கோவின் கல்விப் பணிகளுக்கெல்லாம் ஆணிவேராக அமைந்திருந்தது. இதுதான் அவருடைய "தடுத்து ஆற்றுப்படுத்தல் (Preventive System) என்னும் முறையாகும்.

ஜோண் பொஸ்கோ இளையோரிடம் கொண்ட பற்று எவ்வளவு உயர்ந்தது என்பதை பின்வரும் சம்பவம் தெளிவாக காட்டுகிறது. அதாவது, இளைஞர்களுக்கான சிறைச்சாலை ஒன்றில் 300 க்கும் அதிகமானோர் குற்றவாளிகளாக அடைக்கப்பட்டிருந்தனர் அவர்களை ஒரு நாள் உல்லாசமாக வெளியே கூட்டிச் செல்ல ஜோண் பொஸ்கோ விரும்பினார். ஆனால் சிறை அரிகாரிகள், குற்றவாளிகள், ஓடிவிடுவார்களே எனப்பயந்து தயங்கினர், ஆயினும் அனைவரையும் சிறைக்காவலிருந்து கிராமப்புறத்திற்குக் கூட்டிச்சென்று, மாலையில் மீண்டும் பாதுகாப்பாய் அழைத்து வந்தார். இதை அனைவரும் ஒரு சாதனையாகப் பார்த்தனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறவற சபைகள்

இளைஞர்களைக் கவனிக்கவும் அவர்களுக்குக் கல்வி புகட்டவும் ஒரு துறவற சபையைத் தொடங்க வேண்டுமென பல்லாண்டுகளாய் ஆவல் கொண்டிருந்த பொஸ்கோவுக்குப் புதுச்சபை ஒன்றை ஆரம்பிக்க அனுமதி கிடைத்தது. ஆண்களுக்கென சலேசியன் சபையையும், பெண்களுக்கென, மேரி மசரெல்லோ என்னும் புனிதையின் உதவியுடன் "கிறிஸ்தவர்களின் சகாய மரியின் புதல்வியர்" என்னும் சபையையும் 1872ல் நிறுவினார். இப்பெண்கள் சபைதான் இன்று உலகிலேயே மிகப் பெரிய பெண்கள் சபையாகத் திகழ்கின்றது.



## இறுதிக் காலம்

உழைப்பின் மிகுதியால் ஜோண் பொஸ்கோவின் உடல் நலம் குறைந்து கொண்டே வந்தது. ஏனெனில் அவர் இளையோரைக் கவரும் வகையில் வித்தைகள், கயிற்றில் நடத்தல், வயலின் மீட்டுதல், பாடுதல், கதைகள் கூறுதல் போன்றவற்றைச் செய்து வந்தார். இவற்றோடு அவர் மறையறிவையும், ஒழுக்க விழுமியங்களையும் கற்பித்தார். செபமாலையையும் அவர்களுடன் சேர்ந்து செபித்தார். இவ்வாறு இளைஞரின் பணியில் தன்னை ஆகுதியாக்கிய ஜோண் பொஸ்கோ ஜனவரி 31ம் நாள் 1888ல் இறைவனடி சேர்ந்து 1934ல் புனிதர்களின் திருக்கூட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டார். இன்று அவர் இளைஞரின் பாதுகாவலராக விளங்குகின்றார்.

## இலங்கையில் இன்று சலேசியன் சபையினர்

இன்று இலங்கையில் கிட்டத்தட்ட 11 இடங்களில் டொன் பொஸ்கோவின் பெயரால் கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்கான தங்குமிட வசதியுடன் தொழிநுட்ப, தொழில்சார் கல்வியும் வழங்கப்பட்டு வருகின்றன. 2011 கார்த்திகை மாதம் 19-30 ஆகிய தினங்களில் டொன் பொஸ்கோவின் புனித பண்டம் தாங்கிய அவரது மெழுகு சிலை இலங்கையில் பல பாகங்களிலும் எடுத்துச் செல்லப்பட்டு வணக்கத்துக்காக வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

*"உங்களால் முடிந்தவற்றை நீங்கள் செய்யுங்கள். மிகுதியைக் கடவுளும், அன்னை மரியாளும் நிறைவேற்றுவார்கள்."*

- டொன் பொஸ்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SYNOPSIS

## The contributions of youths towards missionary Activities

The most powerful force and energetic period of our life is youthfulness. As it is commonly said that the present youths will be the future leaders of the society. The youth stage is a tremendous and beautiful one. It desires always to search for new things. The youths are always curious and interested in knowing and verifying the matters. Their urge is always finding momentary happiness than making plans ahead for the future. Therefore the youthness is the special code of the society. Any how they too have obliged to contribute their helping hand in building up the mission of the church.

Today we all live in the push button age where all the commodities are in our hands. The globalization tends the youths to go after the worldly affairs, negating the religious aspects. As a result of that they lose the religious values. It also makes competitions among youths in acquiring prestige, consuming the digital gadgets and in earning money. Hence it is vividly known that youths are always searching for power and big jobs with high remuneration. But where as number of youths are being lost in life because of love affairs, drugs addiction, unethical immoral behaviours and uneducation. Moreover, they are losing their purpose and sense of their existence. They are frightened to challenge their life against worldliness.

The Catholic Church pays much attention on youths and invites them to extend their hands in building up the church and its mission. Jesus Christ is a model for all the youths. He too had gone through with feelings, emotions, enthusiasms and desires as one of us here on earth.

He had toiled in serving with dedication in establishing the values of the kingdom of God. Therefore it is an invitation from God to all the Christians to be the salt of the earth and light of the world. The ulterior mission of the church is to proclaim the word of God to all the nations.

In Christian faith, Jesus who lived two thousand years ago, died and rose from death lives even today. Youths should follow his footsteps and personalize



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

his ideals and commitments and it is this discipleship that can be the best way in knowing him.

Jesus did not live in this world even up to 35 years. His public ministry lasted only 3 years. Even then innumerable people have been attracted by the personality of Jesus, by the fulness of his humanity and his great ideals of life, many became his disciples. So we should accept Jesus as a great man and an ideal model for human life, especially for youths.

His mission has transcended the barriers of caste, religion, race and sex. His love for the poor, children, sick, orphan depressed are of a unique kind. He was servant to all but friend of the poor. He emptied himself and became one with the poor and suffering. Humility and weakness towards the poor and courage towards the leaders of the society are two aspects of his social stand.

Therefore, the life of Jesus should become the path of life for the youth. It may be difficult to live a life of Jesus which is recognized as hard and fast life. Any how, with the help of grace, it is possible to surrender themselves to the will of God.

*Practical Affairs*

The youth should take initiatives and co-operate with Parish Priests in all necessities.

They should be united as one and do activities for the betterment of the Parish and the Church.

All the youths of the Parish are expected to partake in the youth associations and its activities.

They should work for liberation and stand for truth.

## Youngsters are the signs of a Moral society

As a result of our spiritual search for God, human beings come to the awareness that they are created in the image and likeness of God. Such an understanding alone can assist human beings to determine their life in the society.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Though there are many factors which assist humanity to build up a disciplined society, more than the other factors the youngsters have a great role in that. Due to the radical changes in the present era, much expectation is laid on the shoulders of the young generations, because they are not only the leaders of tomorrow, but they are the leaders of the present time too.

So the world is in need of forming the youngsters in such a way to build up a disciplined society. In this formation for youth many factors are playing their roles necessarily, such as exemplary life of some personalities, environment, family situation, schools, college and universities and also the Medias of the modern world. Apart from the above factors, sacred scripture also plays a main role in the formation of youth.

But at present we often listen to the comments, made by almost everyone that youngsters are the main reason for the evil things that take place in society, also many are tempted to put the blame on the youth without fulfilling their responsibilities toward them. The special task of forming the youth depends on the society, because their life from their infancy onwards is influenced by the environment and the society around.

So instead of blaming the youngsters, we should influence them to come out with their abilities and capabilities.

Therefore it is the duty of the society to support the youth through proper approach and exemplary life in view of building up a disciplined society.

## Youth in the Bible

The example of others can be powerful teaching tools for the young people. The modern life style and the extreme secularizing tendencies influence the youngsters towards the idea of inability to overcome their physical and moral temptations. The extreme influence of political, social and religious principles make the youngsters to lose their own unique values of their personal, ethnic, religious identity, and they become unable to be courageous, prudent, sensible, wise in their words and actions. At the same time the exemplary life of the young persons in the bible especially, Joseph, Daniel, John and Stephen edifies the present youngsters who are facing many challenges in their daily lives.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Joseph not only avoided in participating in his brothers' misconducts but also he forgave his hostile brothers and accepted them. He overcame the temptations of committing sin against his chastity. Daniel despite the challenges and difficulties and persecutions he faithfully observed his religious, ethic, and social values. His knowledge, wisdom, talents made him to be in a high position in the administration of the country. John was faithful to the love of Jesus even by standing at the foot of the cross. He was respectful and obedient to Peter, the senior leader. Stephen was a man of God and of good repute in the society and dedicated himself to social work. He stood against the false accusations without fear and boldly witnessed to truth and justice. The above specific characteristic of Joseph, Daniel, John and Stephen helps and encourages the present youngsters to overcome their challenges and to follow their model and lead a good life.

## According to the Christian concept, the problems that are faced by the youth & the solutions.

Youth are the backbone of this world. They too have weaknesses, challenges, difficulties and amidst of all these they aim high in different fields. So looking at this view we could conclude that youth of this age are active, alive & courageous. Nothing is impossible for the youth of this world. Whatever the field they grow & whatever the achievements they succeed but they undergo a lot of hardships during their existence.

The problems such as unemployment, immoral behaviour, political problems, pressure from the parents as well as peer group & so on. If we come to a solution for these problems we should not reflect our model who lived only 33 years that would be the precious age of the youth i.e. Jesus Christ. He underwent a lot of problems & hardships when he took up his mission. But he never loses his heart & mind but he had a great conviction on his vision. This would be the success for his fruitful mission.

So today Jesus' life is a model & example for all the youth. Joy & woe are woven in this life & so man is made for joy & woe. We should go with hope &courage to face the challenges especially the youth have to be directed well by the family society & church.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sexual education on the view of Socio, Political & Church

Bodily life is a lofty gift of God. So it is sacred. God has entrusted this life to man's freedom and co-responsibility. So man is not an independent Lord of his life but he is only a steward under the sovereignty of God. Therefore respect for a person's life, his bodily and mental integrity is very important. Bodily, social psychological, cultural, religious directions are very important for the wholistic growth of a man. Sex is a mixture of everything (Body, feelings). Spiritual sex education is also very necessary.

Marriage is a Covenant by which a man and a woman establish between themselves a partnership of their whole life and which of its very nature is ordered to the well being of the spouses and to the procreation and upbringing of children. It is also a great vocation and a sacrament as well as a social institution.

There are some current problems concerning parenthood, and marriage, namely homo sexuality, surrogate motherhood, in vitro fertilization, Abortion etc.

The creation story of the Bible Gen 1: 27 emphasizes the equal dignity of the sexes. However, while recognizing the equality of the sexes, we must also acknowledge the diversity. The sexes are not merely distinguished by their sexual organs, their whole anatomic system and also their Psychological qualities and spiritual disposition differ.

Therefore sex is understood as a way of expressing the experience of that ultimate togetherness that is called LOVE. Hence sex is justified, even sanctified, as soon as and only as long as it is an expression of Oblative Love. Therefore, the ultimate criterion for norms in sexual ethics is Love and growth in Love.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Guides and models

*The anxiety of the elders*

Today, the main issue of the parents, elders, teachers and other religious leaders is the topsy-turvy conduct of the youngsters. Our society finds it difficult to face the new situations after May 2009. The cause for the sudden change in the morality of the youngsters would be attracted to the 30 years of past history.

*Understanding the present situation.*

The post war period has made much impact on our youngsters directly and indirectly more than that done during the war time. Youngsters were forced to carry the burden of war on their shoulders directly during the war time. Thus, they were made to sacrifice their education, occupation, prosperous life in order to fight. Thousands of youngsters sacrificed their lives. Even after the war many are carrying the scars of war in their hearts and body. The post war period is totally different. Many modern and attractive burdens have been loaded upon them.

*Miss call culture*

The hand phone has become part and partial of the youngsters. The usage of the hand phones though high, more than that they become the very nuisance for them. The problem of miss call is one of the burning issues of the youth.

*Usage of Internet.*

Through the internet the world has come to the fingertips of the youth. By the hand phones they carry the world in their palm and with the touch they see the world. They see what our culture prohibits and they hear what our tradition bans. They are cheating as well as being cheated in the chat and in the face book.

*Addiction*

In Many ways the youngsters have become addicted to drinking, drugs and other habits that control and ruin their lives. Especially, the usage of heroine among the students is very sad to hear.

*Destruction in the values.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Because of the sudden defeat and despair in our Tamil society there is much confusion. Youths try to live as they want forgetting our tradition, culture and our restricted way of life. They are curious to experience all the opportunities that they come across in this modern world. Prostitution becomes a profession.

*The question of the youth*

The youth being in these situations, raise a question that is "what should I do to receive eternal life?" this question was asked by the rich young lad to Jesus, who answered him to follow the simple human rules and regulations which are essential and basic for life.

*Follow me*

That rich young man could not follow the teachings of Jesus. So he went with sorrowful face. Jesus' way is not easy, full of challenges. Jesus was able to assure that man to follow him, in order to get eternal life.

Now how many of our elders, parents, religious leaders, social leaders are ready and worthy to say "follow me" and to guide the youth.

When the guides become good parents, good teachers, and good priests then the youth will get good models.

*Some practical advices*

Do not punish them in public

Do not compare the youth with each other

Partial and cliqueism is not good

Appreciate even a small good matter

Do not try to escape from problems

Share their successes and achievements happily

Forget and forgive their mistakes

Don't burden them with much responsibilities

Show interest in developing relationship.

Explain your desires and expectations clearly.

Be patient.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message of international youth day-2011

Vatican II is a mile stone in the history of the church. This document underlines the importance of laity and youth and invites all to build up a church on the basis of the kingdom values such as love, justice and peace. The late Pope John Paul II beautifully accounted that the youth are the future pillars of the church and he further says, "we cannot even think of a church without youths". They have to use modern technology and communication and make the kingdom values flourish. Every youth is a valuable possession of the church and their lives have to be illumined by faith in God. It is obvious that the grace of God was working in the lives of the young Joseph and David.

It should be appreciated that the year 2011 has been declared as the year of "Catholic Youth". In order to make the year much active, about 1.5milliion youth from all over the world gathered in Madrid, Spain where Pope Benedict XVI spoke out and invited the youth to travel towards holy life by spreading the roots in Christ and in his teachings. To execute this task four suggestions are given:

From the deep spring of desires

Building up the church by rooting oneself in Christ

Being firm in Faith

Believing Christ without having access to the senses.

Finally every youth has to realize the purpose of his very being on earth and has to witness Christ by renewing creation, respecting the dignity of every person, practising the Christian values and responding to God's call whole-heartedly.

# St. John Bosco

St. John Bosco was born in Northern Italy, in the city of Turin on 16th of August in 1855 in a poor peasant family. At the age of two he lost his father his mother educated him as possible as she could in spite of her poverty. In a dream he realized his vocation that is to rescue young lads from evil ways and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

to train them in an honest trade by means of gentleness and kindness. So after his ordination he set out deliberately to cultivate every means for gaining their confidence and friendship by Juggling sleight – of – hand tricks, tight – rope walking, playing the violin, singing, telling stories and games. Through the above methods he began and ends with a simple catechism instruction, the recitation of the Rosary or an explanation of the morning's sermon.

Asst. John's work became better known and supported by 'cooperators'. he was able to establish regular night schools and put everything on a permanent basis by founding his Salesian Institute in Turin under the protection of our Lady Help of Christians and St. Francis de Sales. Full time technical schools, apprentice workshops and dormitories were built by this God- inspired educator, through them his boys learned their religion, reading, writing, and a trade under a remarkable educational system, based upon frequent confession and daily mass.

St. John Bosco could read the hearts of his pupils, and they in turn knew him to be a saint. His unique influence over others is well illustrated by the occasion on which he was, after much hesitation, permitted to take 300 convicts from the city jail on a day's outing, unaccompanied by any guards. In order to extend his beneficent work also to young girls, the saint founded the Daughters of Our Lady Help of Christians in 1872.

St. John Bosco died on January 31, 1888 and was canonized in 1934. In Sri Lanka there are more than 11 institutions in the name of Don Bosco, where many youngsters are trained for various vocations, such as mechanics, electricians, carpenters, computer engineers etc. In Nov. 19-31,2011 the relics of Don Bosco was brought to Sri Lanka.

Do the best you can, God and Our Lady will do the rest' St. Don Bosco.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்
ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 180/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 16
Euro 14

தனிப்பிரதி 55/=


தொடர்பு கொள்க:

**இறையியல் கோலங்கள்**
தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2482, 021 222 7145


# IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Quarterly
Annual Subscription: Local (Incl. postage) Rs. 180/=
Foreign (Incl. postage) U.S.$ 16
Euro 14
Single Copy Rs. 55/=


Correspondence to:

**Irai Iyal Kolangal**
St.Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna,
Sri Lanka.
Tel: 021 222 2482, 021 222 7145



Registered No. QD/14/News/2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org